திராவிடநாடு

16—10—60 | வார வெளியீடு | விலை 16 [illegible]

வழியுமுண்டோ?

—[கரந்தை—கணேசன்]—

என்று ஒழியுமோ இந்தத் தொல்லை—இன்று
எதற்கு எடுத்தாலும் டில்லித் தலை
குன்றுமேல் ஒளிபோல் வாழ்ந்த—அந்தக்
குவலய வாழ்வெலாம் இன்று இல்லை
நந்தமிழ் போதும் எமக்கு என்றால்—இல்லை
நாளும் இந்தியே வேண்டுமென்பார்
சொந்த நாட்டினில் வாழ்ந்திடுவோர்—இங்கு
சுந்தர வாழ்வையே இழந்துவிட;

வந்தவர் வந்தவர் வாழுகின்றார்—அந்தோ!
வாழ்ந்தவர் வகையற்று மாளுகின்றார்
யந்திரம் போன்று இயங்குகின்ற—இந்த
யாக்கையின் காட்சிதான் வேறெங்கு முண்டோ?
ஆண்டிடும் ஆட்சி நம்மதென்பார்—ஆனால்
ஆண்டை டில்லியில் உளர் என்பார்
வெந்திடும் இதயத்தின் வேதனை தீர்த்திட—நமக்கு
விடுதலையன்றி வேறோர் வழியு முண்டோ?

காஞ்சீபுரம்

16—10—60.

தம்பி!

பந்த பாசங்களால் கட்டுண்டு கிடக்கும் இந்தச் சடலத்தைக் கீழே போட்டு விட்டுப், பரமன் திருவடி சேர்ந்திட வழிகாண்பதே, மானிடரின் பிறவிப் பெருங்கடன் என்று கூறித் தவம் கிடப்போர் தங்கி இருக்கும், ரிஷிகேசம்—பனிப்படலத்தையே ஆடை அணியாகக் கொண்டுள்ள பத்ரிநாத்—எனும் திருத்தலங்களைத் தரிசித்து வர, இந்திய குடி அரசுத் தலைவர் பாபு இராசேந்திர பிரசாத் சென்றிருந்தார்.

அழிவுக் கருவிகளைக் குவித்து வைத்துக்கொண்டு, ஆணவ அரசுகளை அமைத்துக்கொண்டு, அமளி மூட்டிவிட ஏது தக்க தருணம் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் வல்லரசுகளை, காட்டுக் குணத்தை விட்டிடுமின்! மனிதகுல மாண்பினை மதித்து நடந்திடுமின்! இனி ஒரு போர்மூண்டிடின், வென்றவர் எவர், தோற்றவர் எவர் என்று நிலை இராது, உலகமே நாசப் படுகுழியில் வீழ்ந்துபோகும் என்று எடுத்துரைத்துப், போர் வெறியைப் போக்கிட, நடைபெற்றிடும் ஐக்ய நாடுகளின் மன்றக் கூட்டத்திலே கலந்துகொண்டு, உலக சமாதானம் குறித்து உரையாற்றிட, நேரு பண்டிதர், நியூயார்க் நகர் சென்றார்.

குத்தும் வெட்டு மிகுந்து, கொள்ளையும் கொலையும் நடமிடும், அசாம், மொழி காரணமாக அமளியில் ஈடுபட்டிருக்கிற இழிநிலையைப் போக்கிடப், பல்வேறு தரப்பினருடன் பேசி, வழிகண்டிட, ஷில்லாங் நகர் சென்றார், கோவிந்தவல்லப பந்த்.

கேரள மாநிலத்தில் சுதந்திரக் கட்சிக்கு வித்தூன்ற முதுகிழவர் ஆச்சாரியார், திருவனந்தபுரம் சென்றிருந்தார்.

அவர் போன்றே பருவமுடையார் எனினும், அவரைக் காட்டிலும் உழைப்புத் திறனும் நெஞ்சுரமும் கொள்கைப்பற்றும் கொண்ட பெரியார், காமராஜர் ஆட்சியின் சாதனைகளைக் காங்கிரசாரே கேட்டு வியந்திடும் வண்ணம் எடுத்துப் பேசத் தமிழகத்தில், பல்வேறு இடங்களில் உலாவந்து கொண்டிருக்கிறார்.

காமராஜரோ, 'ஏழைகள் நெளிகின்றனர், எனக்குத் தெரியும்; ஏற்பாடுகள் பல செய்கிறோம், எனினும், எல்லாம் பணக்காரருக்கே பலன் தருகின்றன, அதுவும் தெரியும்; விலைவாசிகள் விஷம்போல் ஏறுகின்றன, கட்டுப்படுத்தத்தான் வேண்டும். ஆனால் முடியவில்லை, நாடு பிரியவேண்டும் என்று பேசுவார்கள், நன்றாகப் பேசுவார்கள், திறமையாக வாதாடுவார்கள், என்றாலும் நம்பாதீர்கள்'—என்று இந்த முறையில், பேசிவரப் பட்டிதொட்டிகளெல்லாம் சென்று வருகிறார்.

ஐந்து கால் பசு!

பச்சைப் பயிரை நாசமாக்கும் வெட்டுக்கிளிகள் கோடி கோடியாக, இராஜஸ்தானிலிருந்து கிளம்பி, ஆந்திர மாநிலம் வரை, படையெடுத்துப், படுநாசத்தை ஏற்படுத்திக்கொண்டு வருகின்றன.

*

என்ன அண்ணா! பத்ரிநாத்தில் துவக்கிப், பயிரை அழிக்கும் வெட்டுக்கிளியின் படை எடுப்பிலே வந்து நிற்கிறாயே, ஒன்றுக்கொன்று, தொடர்பற்றுக் கிடக்கிறதே, என்றுதானே, தம்பி! கேட்கத் துடிக்கிறாய். இவைகளுக்குள் தொடர்பு உள்ளன என்பதற்காகக் கூறினேன் என்று எண்ணிக்கொள்ளாதே. நமது மக்களின் கவனத்தை ஈர்த்திடும் மிக முக்கியமான நிகழ்ச்சிகள், நடவடிக்கைகள், நடமாட்டங்கள், நிலைமைகள், பல உள; அவற்றிலே சில, இவை.

*

திருத்தலங்களைக் காணச் செல்வது தொன்று தொட்டு இருந்துவரும் பழக்கம். இதனை, மகா மேதாவிகள் என்று தங்களை எண்ணிக்கொண்டிருக்கும் இந்தச் 'சூனுமானுக்கள்' கண்டிப்பர், கேலி பேசுவர். ஆனால் பாரதப் பண்பாடு தெரிந்தவர், நமது பாபு இராசேந்திரர், தர்மநெறி அறிந்தவர் நமது குடிஅரசுத் தலைவர்; குலாச்சாரம், மதாச்சாரம், சதாச்சாரம் வழுவலாகாது என்ற கோட்பாடுடையவர், நமது பாபு; எனவேதான், துரைத்தன அலுவல் ஆயிரத்தெட்டு இருப்பினும், நோய்கொண்ட நிலை பற்றியும் பொருட்படுத்தாது, பத்ரிநாத் சென்றார், இவரன்றோ பாரதப் பண்பாடு தெரிந்தவர், அதன் அருமை பெருமையினை உணர்ந்தவர், என்னே அவர் தம் மத உணர்வு! என்று, காங்கிரசார் பலர் பாராட்டுகின்றனர்.

தம்பி! உள்ளபடி, காங்கிரஸ் நண்பரொருவர், என்னிடம், பாபுவின் பக்திப்பிரபாவம் பற்றிப் பெருமிதத்துடன் எடுத்துப் பேசினார். முழு உண்மையைக் கூறிவிடுகிறேன்; பாபு இராஜேந்திரரின் பெருமை பற்றிப் பேசியதுடன், அந்தக் காங்கிரஸ் நண்பர் நிற்கவில்லை; சுற்றுமுற்றும் ஒருமுறை பார்த்துவிட்டு, குரலைத் தாழ்த்திச், சிறிது கடுமையையும் வரவழைத்துக்கொண்டு, நேரு பண்டிதருக்கு, இந்த நேர்த்தியான பண்பு கிடையாது, கண்ட கண்ட நாடுகள் செல்வதும், கை குலுக்குகளில் களிப்பதும், அடுக்கடுக்காகச் சிகரெட் புகைப்பதும், அவசியமற்ற அரசியல் பிரச்சினைகளைப் பேசிக் கிடப்பதும், உலா வருவதும், உலகத்தின் தொல்லைகளைத் தாமாகத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு, பாரம் அதிகம்! நேரம் போதாது இவைகளைக் கவனிக்க!—என்று பேசுவதுமாக இருக்கிறார்!! என்ன பயன்! ஆத்மபலம் எங்ஙனம் கிடைக்கும்? ஆத்மபலம் இல்லையேல், அரசு, தர்ம சூன்யமானதாகவன்றோ ஆகிவிடும்; என்றெல்லாம் பேசினார். தம்பி! அவர் ஏசினார், நான், அதனை, பேசினார் என்று சொல்லத்தக்க விதமானதாக்கி இங்கு தந்திருக்கிறேன்.

காங்கிரஸ்காரரா நேரு பண்டிதரைக் குறித்து ஏசினார் என்று தம்பி! நீ, கேட்கமாட்டாய்! என்பதை நான் அறிவேன் — ஆனால் வெளுத்ததெல்லாம் பால் என்று எண்ணிக்கொள்ளும் போக்கினர், கேட்பர்— ஏனெனில், அவர்கட்கு இன்றுள்ள காங்கிரசாரின் 'இரட்டை நாக்கு'ப் பற்றித் தெரியாதல்லவா!

ஒரு விஷயம், கவனித்திருக்கிறாயா, தம்பி! நமது கழகத் தோழர்கள், எண்ணுவதைப் பேசுகிறார்கள் — உள்ளொன்று வெளியே ஒன்று என்பது கிடையாது. ஆனால், காங்கிரசார், தனியாக நம்மைச் சந்திக்கும் போது பேசுவது ஒன்று; மேடை ஏறி மக்களைப் பார்த்துப் பேசும்போது, மற்றோர்விதமாக!! இதைத் தான், 'இரட்டை நாக்கு' என்கிறோம். இது, அந்தக் கட்சி, உள்ளுக்குள்ளே குலைந்து வருகிறது, முறிந்து கொண்டு வருகிறது, என்பதைத்தான் காட்டுகிறது.

*

"மன்னர் மன்னவா! தங்களுடைய அறிவுத் தெளிவு கண்டு, அவையிலேகூடி இருந்த அயல் நாட்டுப் பேரறிவாளர் அனைவரும், வியப்புற்றனர்; வாய்திறந்து பேசிடக்கூட அவர்களால் இயலவில்லை" —என்று அரசனை அண்டிப்பிழைத்திட வேண்டிய நிலையினன் கூறிடக்கூடும்; ஆயின், அவனே தன் ஆருயிர்த் தோழனைக் கண்டு பேசும்போது, உண்மையை உரைத்திடத் துடிக்கிறான். "என்ன செய்வர், வெளிநாட்டு விற்பன்னர்கள்! அரசபீடத்தில் அமர்ந்துகிடக்கும் மாமிசப் பிண்டத்தைக் கண்டனர்! வெறிச்சென்ற பார்வை! காரணமற்ற கண் சிமிட்டல்! பொருளற்ற பேச்சு! கவர்ச்சியற்ற சிரிப்பு! — இவைகளைக் கண்டனர், இந்த உருவாரத்திடம் உரையாடியாது பயன்? என்றெண்ணினர் — ஏதும் பேசாது எழுந்து சென்றனர்." என்று கூறுகிறான்.

அஃதேபோலத்தான், இன்று, காங்கிரஸ் தலைவர்களைக் குறித்து உண்மை ஊழியர்கள், கருதுகின்றனர். வெளியே சொன்னால், வெட்கக்கேடல்லவா!!

அதுபோலவே, ஊழியர்களைப்பற்றிக், காங்கிரஸ் தலைவர்களுக்கும், மிகமிக மட்டமான கருத்துத்தான்.

பெரியார், அடிக்கடி கூறுவார்—முன்பெல்லாம்— இப்போது எப்படியோ தெரியாது — எவன் இருக்கிறான் யோக்யன், நம்முடன்! என்று.

இதை, சொத்து சுகம் இழந்தவன், குடும்பத் தொடர்பினைக்கூட அறுத்துக்கொண்டவன், ஊர்ப் பகை கிளம்பினாலும் கவலைப்படாமல், உண்மையான தொண்டாற்றுபவன், அனைவரும், பதிலேதும் கூறாமல், கேட்டுக்கொள்வர்.

தம்பி! அதுபோலவே, இப்போது, மிகப்பெரிய காங்கிரஸ் தலைவர்கள், தமது தோழர்கள் — துணைப் பணியாளர்கள் — தொண்டர்கள் — ஆகியோர்பற்றி, மிகத் துச்சமாகப் பேசுவதை, நானே கேட்டிருக்கிறேன்.

இருசாராரும், ஒருவரை ஒருவர் மதித்து, நேசித்து, வந்த காலம் போயே விட்டது.

இப்போது இருப்பது, கூட்டுறவுகூட அல்ல; ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுக்காமல் இருந்து தீரவேண்டிய நிர்ப்பந்தத்தை இருசாராரும் உணர்ந்துகொண்டு, ஒரே முகாமில் இருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும்—

*

"தெரியுமா உங்களுக்கு ஒரு விஷயம்" என்று தோழமை உணர்ச்சி வழிந்திடும் போக்கிலே, காங்கிரஸ் வட்டாரத்தினர் ஒருவர்—மிகப் பெரிய நிலையில் உள்ளவர்—அமைச்சர் என்றே வைத்துக்கொள்ளேன், தம்பி!, என்னிடம் ஒரு நாள் பேசத் தொடங்கினார்.

"என்ன?" என்று நான் கேட்டேன்—எழுந்த ஆவலை அடக்கியபடி.

"சமுதாய நலதிட்டத்தின்படி கட்டுகிறார்களே, வீடுகள், அந்த இலட்சணம் எப்படி இருக்கிறது தெரியுமா? நானே, அப்படிப்பட்ட வீட்டைப் பார்த்தேன். மகா மட்டம்! உளுத்துப்போன சாமான்கள் போட்டுக் கட்டப்பட்டிருந்தது. சுவரிலே, கைவைத்து அழுத்தினால், பள்ளம் விழுகிறது, பாளம் பாளமாக வெடிப்புகள் உதிருகின்றன. பணம் பாழாகிறது. ஒரே மோசடி. வீண் விளம்பரத்துக்குத்தான் பயன்படுகிறது"—என்று அவர் கூறினார். —என்னிடம்—தனிமையில்—மெத்த உருக்கத்துடன்!

ஆனால், மேடைமீது நின்று பேசும்போது, பார்த்தால், தேன் கலந்த சொற்கள்! தீப்பொறி பறக்கும் முழக்கம்!!

இரட்டை நாக்கு, தம்பி!—ஒன்று, உண்மை பேச! மற்றொன்று, பிழைக்கும் வழி பேச!!

வேறோர் பெரிய காங்கிரஸ் தலைவர்—மிகப் பெரியவர், என்னிடமே சொன்னார்,

> "யாரை நம்பினாலும் நம்பலாம், உத்தரப் பிரதேசத்தானை மட்டும் நம்பவே கூடாது. ஏற்படுகிற அரசியல் குழப்பம், சச்சரவு அவ்வளவும், உத்தரப் பிரதேசத்துக்காரரால்தான்! இந்தியாவிலே மட்டுமல்ல, பாகிஸ்தானிலே கிளம்பும் சச்சரவுகள்கூட உத்தரப் பிரதேசத்தார் கிளப்பிவிடுவதுதான். நான்கூட ஒரு தடவை சொல்லிவிட்டேன், நாட்டை அண்ணாத்துரை அல்ல பிரிக்கப் போவது; உத்தரப் பிரதேசத்துக்காரர்கள் செய்கிற 'ரகளை'யால்தான், நாடு பிரியப் போகிறது, என்று சொல்லிவிட்டேன்."

தம்பி! அச்சம் தயை தாட்சணியமற்ற பேச்சல்லவா இது. ஆனால், சொன்னவர், என்னிடம், தனிமையில் இதைச் சொன்னார்—மேடை ஏறினாலோ, மேசையைத் தட்டிக், கழகத்தை வம்புச்சண்டைக்கே இழுக்கிறார், "வடக்காவது தெற்காவது! இதெல்லாம் என்ன பேச்சு! வேண்டியது என்ன இப்போது? வடக்கு, தெற்கா! சோறு வேண்டும் இப்போது—வயிறாரச் சோறு!"—என்று பேசுகிறார்.

இரட்டை நாக்கினர் இதுபோல; நிரம்பியுள்ளனர் காங்கிரஸ் கட்சியில்.

இந்த மனப்பான்மையுடன் அவர்களில்பலருக்கு, தமக்கென்று தயாரித்து அளிக்கப்பட்டிருக்கும் கருத்துக்களில், எது உள்ளபடி ஏற்புடையது, என்பதிலே ஒரே குழப்பம்.

அவர்களை இன்று ஒரே உருவாக்கிக் காட்டுவது கொள்கையில் உள்ள ஒருமித்த கருத்துமல்ல, நம்பிக்கையுமல்ல—ஒருருவாக இருந்தால்மட்டுமே பேருருவாகத் தெரிந்திட முடியும் — அந்தப் பேருருக்கண்டுதான், மாற்றுக் கட்சியினர், மருண்டிடவேண்டும்—அவர்களுக்கு அந்த மருட்சி இருக்கிற வரையில்தான், நமக்கு ஆட்சி—இல்லையேல் வீழ்ச்சிதான்—இந்தஎண்ணம்தான், இன்று காங்கிரசாரைப் பிணைத்து இருக்கிறது.

ஒரு அரசரிடம் குற்றவேல் புரிந்து கொண்டே, அவரிடம் பற்று இன்றிப், பகைமை உள்ளுக்குள் வைத்துக்கொண்டு; பணிந்து கிடப்பதுபோலப் பாவனைக் காட்டிக் கொண்டு, அதேபோது எப்போது வீழ்வான், கைக்கொட்டிச் சிரிக்கலாம் என்று உள்ளூர எதிர்பார்த்துக் கொண்டு இருந்திடும், எடுபிடிகள், எதிரிப்படையினரைவிட, அந்த அரசுக்கு ஆபத்தல்லவா! அது இன்றுள்ள காங்கிரஸ்நிலை. இதேநிலை, பயங்கரமான புரட்சி வெடிக்கு முன்பு, பிரான்சு நாட்டிலே இருந்தது.

காவலனும் அவனுக்குற்ற தோழர்களாக விளங்கிய கனதனவான்களும் நடாத்திய காமக்களியாட்டங்களைக் கண்டு, வெகுண்டனர், உழைத்தும் பிழைக்க முடியாமல், உழன்று கிடந்த மக்கள்! எனினும், கோபத்தை வெளியே தெரியவிடமாட்டார்கள். அது மட்டுமல்ல, மன்னன் நடத்தும் காமக்களியாட்டத்தை, கலை என்றுகூடக் கூறிப் பாராட்டினர்! காய்ந்து கிடக்கும் இந்தப் பாறை நெருப்பைக் கக்கும் என்று கூறினால், யார் எளிதில் நம்புவர்! குமுறிக், கொதித்து, வெடித்து, நெருப்புக் குழம்பு வேகமாகப் பீறிட்டுக் கொண்டு வெளியே வரும்போதுதான், எரிமலையின் அழிக்கும் சக்தி தெரிகிறது. அதுபோன்றே, இளித்துக்கிடக்கும் இந்த மக்கள், என்ன செய்யவல்லார்! இறையே! எமைக் காத்தருளே! என்று தொழுது கிடக்கும் இந்த எலும்புந் தோலுமாயுள்ளவர்கள். எங்ஙனம் நம்மை எதிர்ப்பர்! நமது மணிமுடி விடு ஒளிகண்டு, ஆச்சரியத்தால், வாய்பிளந்து நிற்கும் இந்தப் பராரிகள், படைபலம் கொண்ட நம்மை எதிர்க்கும் துணிவினை எப்படிப் பெறமுடியும்! — என்றெல்லாம் எண்ணியன்றோ' வேந்தர்கள் ஏமாந்தனர். அதுபோலவே, காங்கிரஸ் கட்சியின் மூலவர்கள், தம்மை நத்திப் பிழைப்போர், தெந்தினம் பாடி நிற்போர், மாலை அணிவித்து வரவேற்போர், மனுக்கள் கொடுத்து மண்டியிடுவோர், வளைவுகள் அமைத்து வாழ்த்துக் கூறுவோர், ஆகியவர்கள், என்றென்றும், அடிமைகளாய், அறிவாற்றலற்றவர்களாய், இருப்பர், எதிர்த்திட இயலாது, குனிந்து நிற்க, வளைந்து நிற்க, வீழ்ந்து வணங்க மட்டுமே அறிவர், நிமிர்ந்து நின்று உரிமை கேட்டிடும் வகை அறியார் — என்றுதான் எண்ணிக்கொண்டுள்ளனர்.

அதுபோலிருப்பதுதான் 'பாமரர்' வாடிக்கை! ஆனால், அவர்கள், மிகக் கூர்மையாக, மற்றொன்றைக் கவனித்துக்கொண்டே இருப்பர் — ஆட்டிப் படைப்போர், ஆதிக்கக்காரர் — எப்போது இளைப்பாரலோ; களைப்பாரலோ, நிலைமிழந்து தடுமாறப்போகிறார்கள் — அந்தச் சமயம் வந்ததும், பாய்ந்து, கீழே சாய்த்து, பழிக்குப்பழி வாங்கிடவேண்டும் — என்று காத்துக் கிடப்பர்! வகை அறியாதார் அல்ல, பாமரர்—காலம் வரட்டும் என்று காத்திருக்கும் பொறுமைசாலிகள்! அறிவற்றவர்கள் அல்ல, மக்கள்—ஆத்திரத்தை அடக்கிக்கொள்ளக் கற்றவர்கள்! பிடிசாம்பலாகிப் போனவர்கள் அல்ல, அந்த மக்கள்—நீறுபூத்த நெருப்பாகி நிற்பவர்கள்!!

இதை, வீழ்ந்த அரசுகள், விரண்டோடிய மன்னர்கள், வெட்டுண்ட தலைகள், காட்டுகின்றன.

இப்போது படித்தாலும். தம்பி! எப்படி எப்படியோ எண்ணம் செல்கிறது—அப்பாவிகள் என்று ஆணவக்காரர் எண்ணிக்கொண்டிருந்த நிலையில் இருந்த மக்கள், காலம் பிறந்தது என்று தெரிந்ததும் ஆர்த்தெழுந்து ஆணவ அரசுகளைத் தூள் தூளாக்கிய வீரக் காதைகளைப் படிக்கும்போது.

பிரான்சு நாட்டிலே, வெட்டவெளியை விழாப் பந்தலாக்கி, விருந்து ஏற்பாடு செய்வானாம், மன்னன்! அதைக் கட்டணம் கொடுத்துக் கண்டு மகிழ வருவாராம், மக்கள்!! ஆரணங்குகள் உண்டு மிச்சமானதை ஆற்றலரசர்கள் உண்பதும், 'அதரம் பட்டது எனக்கு! வேண்டாம், அவள் கரம்பட்டதே போதும் எனக்கு'—என்று சீமாட்டி முன் நின்று சல்லாபச் சண்டையிடும் சீமான்கள் களிநடமாடுவது—இவை காட்சிகள்—கட்டணம் கொடுத்துக் காணவேண்டிய காட்சிகள்!!

இதே மக்கள்தான், அதிலும், பெண்கள், படைவரிசை அமைத்துக்கொண்டு, கூட்டுக்கோலும், தட்டு முறங்களும், ஏரோட்டும் கோலும், இன்னபிறவும் ஆயுதங்களாகக் கொண்டு, படைஎடுப்பு நடத்தி, அரண்மனையில் நுழைந்து, ஆங்கு காணக்கிடக்கும் போகப் பொருட்களை எல்லாம், தொட்டும் இழுத்தும், உடைத்தும் உருக்குலைத்தும், வேடிக்கை காட்டினர்!!

நல்ல வேளையாகக் காமராஜருக்கு இந்தக் கதைகள் தெரியாது — அவர் பெரியஎழுத்து விக்கிரமாதித்தன் கதையோடு தமது படிப்பை நிறுத்திக் கொண்டவர், என்கிறார்கள். எனவே அவருக்கு, அடங்கிக் கிடக்கும் மக்கள், ஆர்த்தெழக்கூடும், பணிந்து கிடக்கும் பாமரர், பிறிதோர் நாள் பயங்கரப் புரட்சி நடத்திடக் கூடும் என்பதுபற்றிய, நினைப்பே எழாது.

இதனை அறிந்துள்ள மற்ற அமைச்சர்களோ, அறிந்ததைக் கூறார்—ஏனெனில், அவர்களுக்குப் பாபம், சங்கடமாகத்தானே இருக்கும்—என்ன கற்று என்ன பலன்! நாம் இவருக்குக் கீழ்தானே!!—என்று எண்ணும்போது அவர்களுக்குக், கற்றதை மறந்தால் நல்லது என்றுகூடத் தோன்றக்கூடும்.

*

இந்நிலையில் இன்றுள்ள காங்கிரசில், பாபு பத்ரிநாத் சென்றதைப்பாராட்டி, அது அவருடைய பக்திப் பிரபாவத்தை, பாரதப் பண்பாட்டைக் காட்டுவதாகும் என்று கனிவுடன் கூறி, அதேபோது, நேரு பண்டிதர், உலகிலே பல்வேறு இடங்கட்கு உலா வருதல் குறித்துக், காங்கிரசார் ஒருவர், கேலியாகப் பேசியதிலே வியப்பில்லை அல்லவா? ஆனால், இதிலே வியப்பு இல்லை என்பதை எடுத்துக்காட்ட அல்ல நான் இதனைக் குறிப்பிடுவது. எனக்கு, அந்தக் காங்கிரஸ் நண்பருக்குக் கொள்கையில், பிடித்தமும் அழுத்தமும் எந்த அளவு இருக்கிறது என்று தெரிந்துகொள்ளவேண்டும் என்பதிலே, சுவை கலந்த ஒரு ஆவல். எனவே நான், அவரிடம், பேச்சைத் தொடர்ந்தேன்.

*

"ஆமாம்! திவ்ய க்ஷேத்திரங்களைத் தரிசிப்பது, பாரதப் பண்பாடு என்கிறீர். இருக்கட்டும். இது, பாபு இராஜேந்திரருக்கு இருக்கிறது, ஆனால் நேரு பண்டிதரிடம் இல்லை என்கிறீர். அதுவும் சரி. ஆனால் இந்த விஷயத்தில், காந்தியார்பற்றி உமது கருத்து என்ன?"—என்று கேட்டேன்.

நண்பருக்கு மெத்த மகிழ்ச்சி.

"உண்மையாகச் சொல்கிறேன் — இப்போது எங்கள் காங்கிரசார், காந்தியாரை அறவே மறந்துவிட்டார்கள்—உங்கள் கழகத்துக்காரர்தான், அவரைப் பற்றி, மக்களிடம் பேசி வருகிறார்கள்," என்றார் அந்த நண்பர்.

அவருடைய அந்த முன்னுரைக்குப், புன்னகையன்றி வேறென்ன பதிலுரை இருக்க முடியும். தந்தேன்-பெற்றுக்கொண்டார்-பேச்சைத் தொடங்கினார்.

"காந்தியார், பாரதப் பண்பாடு தழைக்கவேண்டும், என்பதற்காகவேதான், 'ஸ்வராஜ்யம்' கேட்டார்—பெற்றுத் தந்தார்! மகா பக்திமானல்லவோ, அவர்! இராம பக்தர்! திவ்ய க்ஷேத்திரங்களைத் தரிசிப்பது, இந்து தர்மம் என்பதை நன்கு உணர்ந்தவரல்லவா!"—என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினார்.

"மன்னிக்கவேண்டும்! காந்தியார், திவ்ய க்ஷேத்திரங்களைப்பற்றி, மிகக் கடுமையாகக் கண்டித்திருக்கிறார்" என்று நான் சொன்னேன்.

ஆரம்பமாகிவிட்டதா, கழகம்!!"—என்று கோபமும் கேலியும் கலந்த குரலில் பேசலானார்.

'கோபம் கூடாது! காந்தியாருடைய மிக முக்கியமான உபதேசமே அது. நான் கூறுவதைக் கேளும். காந்தியார், திவ்ய க்ஷேத்திரங்களிலே, காணப்படும், ஆபாசங்களைப் பார்த்துவிட்டு, மனம் நொந்து போனவர்,"—என்றேன்.

"உம்மிடம், வந்து சொன்னாராக்கும்!"—என்று குத்தலானார், நண்பர். கோபம் இருக்குமல்லவா, அவருக்கு. "என்னிடம் மட்டுமல்ல—எல்லோரிடமும் சொல்லவேண்டும்என்பதற்காக, காந்தியார்,எழுதியே வைத்துவிட்டார், படிக்கிறேன்; பதறாமல், கேளும்"—என்று கூறிவிட்டுக், காந்தியாரின் சுயசரிதையை எடுத்தேன்.

"காந்தியார், அரித்துவாரத்தில், நடைபெற்ற கும்பமேளா பார்க்கச் சென்றார்..."!—என்று நான் துவக்கினேன். நண்பர், 'காந்தியாருக்கு' திவ்விய க்ஷேத்திரம் பிடிக்காது என்றல்லவா சொன்னாய்;" என்றார். "சிறிதளவு பொறுமை காட்டும்" என்று கூறிவிட்டுச், சுயசரிதையைப் படிக்கலானேன்.

> "சுற்றித்திரிந்ததில் பலவிஷயங்களைக் கவனித்தேன். யாத்ரீகர்களிடம் பக்தியைக் காட்டிலும் கவனக்குறைவும், வெளிவேஷமும், துப்புக்கெட்டதனமுமே அதிகமாக இருந்ததைப் பார்த்தேன். சாதுக்கள் **கூட்டம் கூட்டமாக அங்கே வந்திருந்தார்கள். உலக வாழ்க்கையின் இன்பங்களையெல்லாம் அனுபவிப்பதற்கென்று பிறந்திருப்பவர்களாகவே அவர்கள் தோன்றினர்."**

இதைநான் படித்துவிட்டு, நண்பரின் முகத்தைக் கவனித்தேன். வேதனைக் குறிகள் தென்பட்டன.

திவ்ய க்ஷேத்திரங்களிலே,சாதுக்கூட்டம் இருந்துகொண்டு, ஆபாசமாக நடந்துகொள்கிறார்கள் என்பதைக் காந்தியார், எத்துணை நகைச்சுவையுடன் கூறியிருக்கிறார், கவனித்தீர்களா......

> "உலக வாழ்க்கையின் இன்பங்களை எல்லாம் அனுபவிப்பதற்கு என்றே பிறந்திருப்பவர்களாகவே அவர்கள் தோன்றினர்."

இதை நாம், விரிவாக, விளக்கமாகப் பேசவும் வேண்டுமா......

மும்மலம் நீக்கினோர், ஐம்புலனை அடக்கினோர், உலகைத் துறந்தோர், கனியேனும் செங்காயேனும் கந்தமூலங்களேனும் உண்டு இருப்போர், என்று,

நாம் பெருமையாகப் பேசுகிறோம். ஆனால், அரித்துவாரம், ரிஷிகேசம் ஆகிய இடங்களிலே, இருந்து வரும் சாதுக்கள்; இன்பங்களை அனுபவிக்கவே பிறந்தவர்கள் என்று காந்தியாருக்குத் தோன்றிற்று! ஐயா! காந்தியார், பக்திமான், சநாதனி, இந்து—எனினும், நேர்மை, தூய்மை, வாய்மை, இவைகளில் அசைக்கமுடியாத பற்று வைத்திருந்தவர்—எனவேதான், கட்டியிருப்பது காவி எனினும், உலவுவது கங்கைக் கரை என்றாலும், பெயர் சாது சன்யாசி என்று இருப்பினும், அவர்களுடைய செயல் கண்டு, மனம் வெதும்பி, எழுதினார். இவர்களைத் தரிசிக்கவா, பாபு இராஜேந்திரர் போகவேண்டும்?—என்று நான் கேட்டேன். நண்பருக்குக் கோபம் குறைந்தது வருத்தம் மேலிட்டது.

காந்தியார், மதத்தை வாணிபச் சரக்காக்கிக் கொள்ளவில்லை, எனவேதான், உள்ளதை உள்ளபடி உரைத்தார் — அதனைக் கேட்டுப் பலருக்கு, திவ்ய க்ஷேத்திரங்களின்மீது வெறுப்பு ஏற்படும் என்பது அவருக்குத் தெரியும் — எனினும், பொய்யும் புனைசுருட்டும் எந்தப் போர்வையிலே இருப்பினும், அதனை வெளிப்படுத்தித் தீரவேண்டும் என்று அந்தத் தூயவர் கருதினார்—எனவேதான், காவி உடையில் உலவியவர்களின் கபடத்தைக் கண்டித்தார்; இன்றோ, கதர் உடையில் இருந்துகொண்டு, எத்துணை அக்ரமம் செய்தாலும், கண்டிக்கப் பலர் கூச்சப்படுகின்றனர்; தண்டிக்கச் சில அதிகாரிகள் அச்சப்படுகிறார்கள்!" என்று நான் கூறினேன். நண்பர், நீண்ட பெருமூச்செறிந்தார்.

"நண்பரே! ஐந்துகால் பசு பார்த்திருக்கிறீரா?" என்று நான் கேட்டேன். அவர் திடுக்கிட்டுப்போய், "என்னய்யா ஐந்தாண்டுத் திட்டங்களைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறோமே. அது போதாதா! ஐந்துகால் பசு வேறு பார்க்கவேண்டுமா?" என்று கேட்டார்.

"காந்தியார், பார்த்தாராம்" என்றேன் நான்.

"நல்லவேளை, ஐந்தாண்டுத் திட்டத்தைப் பார்க்கவில்லை அவர்! ஐந்துகால் பசுவைப் பார்த்தார்போலும். உம்! அது, என்ன, சொல்லும், கேட்போம்." என்றார் ஆயாசத்துடன்.

"சொல்வதாவது! படிக்கிறேன், கேளும்" என்று கூறிவிட்டுச் சுயசரிதையைப் பிரித்தேன்.

"இங்கே ஐந்துகால்களோடு கூடிய ஒரு பசுவையும் பார்த்தேன். நான் ஆச்சரியப்பட்டுப்போனேன். ஆனால் விஷயம் தெரிந்தவர்கள் சீக்கிரத்தில் எனக்கு ஏற்பட்டிருந்த பிரமையைப் போக்கிவிட்டனர். அந்தப் பரிதாபகரமான ஐந்துகால் பசு, கொடியவர்களின் பேராசைக்குப் பலியானதேயன்றி, வேறு அல்ல. உயிருடன் இருந்த ஒரு கன்றின் காலைத் துண்டித்து, இப்பசுவின் தோலில் பொருத்தியிருந்தார்கள். அதுதான் இந்த ஐந்தாவது காலே ஒழிய, வேறு ஒன்றும் இல்லை என்பதை அறிந்தேன்! இவ்வித இரட்டைக் கொடுமையின் பயனைக்கொண்டு, ஒன்றும் அறியாதவர்களின் பணத்தைப் பறித்து வந்தார்கள். இந்த ஐந்துகால் பசுவைப் பார்க்க ஆவல் கொள்ளாத இந்துவே இல்லை. இந்த அற்புதப் பசுவிற்குத் தாராளமாகத் தருமம் செய்யாத இந்துவும் இல்லை."

தம்பி! காங்கிரஸ் நண்பர், வெடுக்கென்று, என் கரத்திலிருந்து புத்தகத்தைப் பறித்துக்கொண்டார்—கேட்டிருந்தாலே கொடுத்திருப்பேன் — அவருக்கு ஆத்திரம், அவசரம்—ஐயப்பாடு! நான் உண்மையில், புத்தகத்தைத்தான் படிக்கிறேனா, அல்லது இட்டுக்கட்டிப் பேசுகிறேனா, என்று சந்தேகம்.

புத்தகத்தைப் பார்த்தார் — உண்மை அவர் உள்ளத்தை உலுக்கிவிட்டது. வேதனை அடைந்தார்.

உலக இன்பத்தை அனுபவிக்கும் சாதுக்கள்! அக்ரமமான புரட்டு நடத்திப் பணம் பறிக்கும் எத்தர்கள்! அற்புதம் என்று நம்பி, பணம் பறிகொடுத்து பஜித்துக்கிடக்கும் அப்பாவிகள்!!—திருத்தலங்களில் காணக்கிடப்பவை இவை!! இங்கு சென்று வருவதால், என்ன பலன்? என்று நான் கேட்டேன்—அவர் பதில் கூறுவார், என்ற எண்ணத்துடன் அல்ல! அவர் மனம் மாறுவது நன்கு தெரிந்ததால்.

நண்பரே! புரட்டுக்கும் புனிதத் தன்மைக்கும் வித்யாசம் தெரியாமல், காவி கட்டியவனைக் கடவுள் அருள் பெற்றோன் என்றெண்ணிக் கருத்தழிந்துகிடக்கும், இந்த மக்களுக்கு, மதவெறி எந்த அளவு இருந்ததாம் தெரியுமா?

கல்கத்தாவிலிருந்து அரித்துவாரம் செல்லும் இரயில், மிக நெருக்கடியானதாம்—வெப்பம் கொல்லுமாம். ஆனால் அப்போதும், இந்து, இந்து தரும் தண்ணீரைத்தான் சாப்பிடுவானாம்.

காந்தியார் எழுதுகிறார், இதைக் குறித்து; கேளும்:

"இத்தகைய பிரயாணத்தினால் ஏற்பட்ட நீர் வேட்கையில்கூட வைதிக இந்துக்கள் முஸ்லீம்களிடமிருந்து தண்ணீர் வாங்கிக் குடிக்க மறுத்தனர். இந்து தண்ணீர் கிடைக்கும் வரையில் அவர்கள் காத்துக்கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் இதே இந்துக்கள் நோயுற்றுவிடும்போது, டாக்டர் தங்களுக்குக் கொடுக்கும் சாராயத்தையும் மாட்டிறைச்சிச் சூப்பையும் குடிக்கத் தயங்குவதில்லை. தங்களுக்கு மருந்துத் தண்ணீர் கொடுப்பவர் கிருஸ்தவக் கம்பவுண்டரா, முஸ்லீம் கம்பவுண்டரா என்பதைக் குறித்து விசாரிப்பதும் இல்லை, என்பது கவனிக்கவேண்டியதாகும்."

நண்பருக்கு, மேலும் விளக்கங்கள் தரத் தேவையில்லை என்று தோன்றிற்று; எனவே, தம்பி! வேறு பகுதிகளை, படித்துமட்டும் காட்டினேன் — விளக்கம் கூறாமல். அந்தப் பகுதிகள் இவை.

"இயற்கைக் காட்சிகள் மிகுந்த இடங்களை மனிதர்கள் உபயோகித்து வந்த விதங்கள் என் மனத்திற்குச் சங்கடத்தை உண்டாக்கின. அரித்துவாரத்தைப் போல, ரிஷிகேசத்திலும் மக்கள் ரஸ்தாக்களையும், அழகிய கங்கைக் கரைகளையும் ஆபாசப்படுத்தி வந்தனர். கங்கையின் புனித நீரையும் அசுத்தப்படுத்த அவர்கள் தயங்க

(8-ம் பக்கம் பார்க்க)

தொடர்பு அறுபட......!

மலர் 19] ஆண்டுச் சந்தா ரூ. 8. (16—10—60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 14

கேலிக் கூத்து
ஏமாற்று வித்தை
போலி ஜனநாயகம்
சுதந்தரமென்பது சுத்தப் பொய்

தீண்டாமையின் கொடுமை எந்த அளவுக்கு இந்நாட்டில் வேரூன்றி அசைக்கமுடியாததாகி விட்டிருக்கிறதென்பதை எடுத்துக்காட்டப் பயன் படுத்தப் பட்டவையாகும், நாம் மேலே தந்துள்ள சொற்றொடர்கள்.

இச்சொற்றொடர்களைப் பயன்படுத்திப் பேசியவர் வேறு யாருமல்ல. இந்தியத் துணைக்கண்டத்தின் இரயில் மந்திரி ஜெகஜீவன்ராம் அவர்கள்தான் 12-10-60 மதுரையில் உள்ள கிராமிய பயிற்சி நிலைய ஆண்டு விழாவில் கலந்துகொண்டு பேசியபோது இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தீண்டாமையை ஒழிப்பதற்கென்றே ஒரு தனி இலாக்காவை ஏற்படுத்தி வைத்திருக்கிறது அரசாங்கம். இந்த இலாக்கா பெயரளவில் தீண்டாமை ஒழிப்புக்குப் பணியாற்றுவதாகச் சொல்லப்படுகிறதே யொழிய, உண்மையில் நாட்டில் தீண்டாமை துளியளவும் ஒழியவில்லை என்று ஜெகஜீவன்ராம் போன்றவர்கள் கூறி வேதனைப் பெருமளவுக்கு அது கோர தாண்டவமாடுகிறது என்று எடுத்துக்காட்ட வேண்டியிருக்கிறது.

> "சாதிப்பாகுபாடு பீதியைத் தீர்க்க அகிம்சை நடவடிக்கைகள் பயன்தராவிட்டால், பலாத்கார நடவடிக்கைகளை மேற்கொண்டாவது இதை ஒழிக்க நாட்டிலுள்ள இளைஞர்கள் முன்வரவேண்டும்."

என்று அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார். இல்லை, இல்லை, அழைப்பு விடுகிறார். அகிம்சை பயன்தரா விட்டால்,பலாத்காரத்தை மேற்கொள்ளுங்கள் என்று ஒரு பெரிய பொறுப்பிலிருக்கும் அமைச்சர் கூறுகிறார் என்றால், அவர் எவ்வளவு மனம் உடைந்து இப்படிப் பேசியிருக்கவேண்டுமென்பதனை எண்ணிப் பார்க்கவேண்டுகிறோம்.

எங்கே இளைஞர்கள் பாராமுகமாக இருந்துவிடுவார்களோ என்று எண்ணியோ என்னவோ,

> "இந்த அநீதியை இளைஞர்கள் சகித்துக் கொண்டிருக்கக்கூடாது"

என்று மேலும் தமது கருத்தை இளைஞர்கள் மனதிலே பதியவைக்கிறார். அமைச்சர் இதோடு நின்று விடவில்லை,

> "சாதி அமைப்புத் தொடர்ந்து இருக்கும் போது, ஜனநாயகம், புனித சுதந்திரம் ஆகியவை பற்றிப் பேசுவது வெறும் கேலிக்கூத்தாகும்"

என்று, தாம் சார்ந்திருக்கும் அரசாங்கத்தின் ஜனநாயக முறையை — மனித சுதந்தரத் தன்மையையே சாடுகின்றார். சஞ்சலம் அந்த அளவுக்கு அவருக்கு ஏற்பட்டிருக்கிறது, என்பதை அவருடைய இந்தப் பேச்சுக்கள் எடுத்துக்காட்டுகின்றன.

> "தீண்டாமை உண்மையில் ஒழிந்துவிட்டதா என்று கண்டுபிடிக்கக் கிராமத்திலுள்ள கிணறுகள் சாதி வித்தியாசமின்றி உபயோகப் படுகின்றனவா என்று பார்த்தாலே போதும்"

என்கிறார். சாதிபேதம் தீண்டாமை ஆகிய கொடுமைகள் ஒழிந்துவிட்டனவா என்று அறியக் கிராமங்களுக்குப் போகச் சொல்லுகிறார் அமைச்சர் அவர்கள். கிராமங்களுக்கு ஏன் போகவேண்டும்? நகரங்களில் இருந்துகொண்டே தீண்டாமை எந்த அளவுக்கு ஒழிந்துவிட்டதென்பதை மிக எளிதில் கண்டுபிடித்துவிடலாமே.

தெருவில், நடைபாதையில், தீண்டப்படாதவன் என்று கருதப்படுபவன் போகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதே சமயத்தில் அதே தெருவில் அதே நடைபாதையில் தீண்டாமைக்குத் தீனி போட்டு வளர்க்கும் ஒரு வைதிகர் வருகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது தெருத் திண்ணையில் இருந்துகொண்டோ, நடைபாதை ஓரத்தில் நின்றுகொண்டோ கவனியுங்கள். எதிரில் வருபவன் தீண்டப்படாதவனாக இருக்கலாமோ என்று வெறும் சந்தேகம் மட்டும் அவர் மனதைத் தொட்டாலே போதும், உடனே அவர் எகிறிக் குதித்துத் தவளை மாதிரி சாக்கடையில் போய் நிற்கிறார். ஓரளவு பலம் படைத்தவராக இருந்தால் சாக்கடையில் போய்ச் சமாளித்துக்கொண்டு நின்றுவிடுகிறார். வயோதிக வைதிகராக இருந்தால் சாக்கடையிலேயே விழுந்துவிடுகிறார். சனாதனம், தன்னைப்போன்ற மனிதரைத் தீண்டுவதைவிடச், சாக்கடையே மேலென்று கருதி அதில் விழுகிறது.

இந்த இலட்சணத்தில் நகரம் இருக்கும்போது, பாவம், அமைச்சர் தீண்டாமையின் கொடுமையைக் காணவேண்டுமானால் கிராமங்களுக்கு வாருங்கள் என்று அழைக்கிறார். வேண்டுமானால், நகர்ப்புறங்களைவிட நாட்டுப்புறங்களில் தீண்டாமையின் கொடுமை அதிக அளவில் பரவிக்கிடக்கிறது என்று சொல்லலாமே யொழிய, அதனைக் காணக் கிராமங்களுக்கு ஓடவேண்டியதில்லை.

சில ஆண்டுகட்கு முன், அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தீண்டாமை ஒழிப்பு இலாக்காவினர், ஒரு சுவரொட்டி மூலம் தீண்டாமையின் கொடுமையை விளக்கி வெளியிட்டனர். அதுபோது நகர்ப்புறங்களில் நடமாடும் வைதிகம் எந்த அளவு அமர்க்களம் செய்ததென்பதை நாம் இதற்குள் மறந்தா விட்டோம்?!

இந்த நிலையில் நாடு இருக்கும்போது, ஜெகஜீவன்ராம் போன்ற பெரியவர்கள் தீண்டாமையை ஒழித்துக்கட்ட நாட்டிலுள்ள இளைஞர்களையும், தீண்டாமை ஒழியவேண்டுமென்பதற்கு இசைவு தரும் மற்றவர்களையும் அறைகூவி அழைக்கிறார்கள் நாமும் இதனை வரவேற்கிறோம். ஆனால், இந்த அழைப்பின்மூலம் வெற்றி காணவேண்டுமானால், சர்க்காருக்கும் சனாதனத்துக்கும் உள்ள பிரிக்கமுடியாத தொடர்பு-பற்று—வாஞ்சனை—ஐயோ பாவம் சனாதனமே! என்றெண்ணும் இரக்க சுபாவம், ஏமாந்தபோக்கு, ஆகிய இவை முதலில் மாறவேண்டும். இல்லையேல், யார் எவ்வளவு பாடுபட்டாலும் தீண்டாமை திருவிழாக்கோலம் பூண்டுகொண்டுதான் இருக்கும்.

எனவே, சர்க்காருடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ளும் வாய்ப்பினைப்பெற்ற ஜெகஜீவன்ராம் போன்றவர்கள் சனாதனத்துக்கும் சர்க்காருக்குமுள்ள தொடர்பை அறுக்க என்னென்ன வழிகள், முறைகள், ஏற்பாடுகள் என்பனவற்றைக் கண்டுபிடித்து, அந்தத் துறையில் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

●

6-ம் பக்கத் தொடர்ச்சி

> வில்லை. கொஞ்சத் தூரம் போனால் ஜன நடமாட்டமில்லாத இடங்களுக்கு எளிதாகப் போயிருக்கக் கூடுமெனினும், அப்படிச் செய்யாமல், பாட்டைகளிலும் நதிக்கரைகளிலும் மக்கள் மலஜலம் கழித்ததைக் கண்டு என் மனம் அதிக வேதனை அடைந்தது."

தம்பி! காந்தியாருக்கு இருந்துவந்த அழுத்தமான மதநம்பிக்கையை, நான் குறிப்பிட்ட, காங்கிரஸ் நண்பர், எடுத்துக்காட்டி, பாபு இராசேந்திர பிரசாத் அத்தகைய பாரதப் பண்பாடு வழி நிற்பவர் என்று பெருமிதத்துடன் பேசினார் — ஆனால் காந்தியார் தமது சுயசரிதையில் ஒளிவு மறைவு இன்றி, மதத்தின் பெயரால், நடத்தப்படும் மோசடிகளையும், பக்தி காரணமாகப் பாமரர், ஐந்து கால் பசுவைப் பூஜிப்பது போன்ற அளவு ஏமாளிகளாகிப் போவதையும், எடுத்துக்காட்டியிருப்பதை நான் படித்துக்காட்டவே, என்ன எண்ணிக்கொண்டாரோ தெரியவில்லை, மேற்கொண்டு பாபு பற்றியோ, பத்ரிநாத் பற்றியோ, பேச்சை எடுக்கவில்லை.

✱

மத நம்பிக்கையைக் கைமுதலாக்கிக்கொண்டு, ஆதிக்கம் செலுத்த விரும்புவோர், கொழுக்கத் துடிப்போர் தவிர, மற்ற எவரும், எத்துணை மத நம்பிக்கை கொண்டவர்களாக இருப்பினும், பொய்யும் புரட்டும், மூடத்தனமும் ஏமாற்றுவித்தையும், திருத்தலங்களில் காணப்படின், மூடிமறைக்காமல், கண்டித்து வந்தனர். அவ்விதம் கண்டித்தவர்களை, வன்கணாளர்கள், விட்டு வைத்ததுமில்லை.

அரித்துவாரம், ரிஷிகேசம், காசி, போன்ற க்ஷேத்திரங்களில் நடைபெற்ற புரட்டுகளையும், நெளிந்த ஆபாசங்களையும், எடுத்துக்காட்டியது போலவே, காந்தியார், காசியிலே உள்ள கண்றாவிக் காட்சியையும், கல்கத்தாவில் காளிமாதாவுக்குத் தரப்படும் உயிர்ப்பலிக் கொடுமையையும், எடுத்துக்காட்டிக் கண்டித்தார்.

✱

சுயமரியாதைக்காரரின் கண்டனம் என்றால், வெகு எளிதாக, நாத்திகப்பட்டம் கட்டிப், பொதுமக்களை அவர்களின்மீது ஏவிவிடலாம், என்று மதத்தால் மந்தகாச வாழ்வு நடாத்துவோர், எண்ணிக்கொள்வர்.

ஆனால், காந்தியாரோ, மதவாதி; சனாதனி; இராம பக்தர்; வைஷ்ணவ, ஜனதோ என்று பாடிக், கேட்போர் உள்ளத்தை உருக்கி, அனைவரையும் பக்தர்களாக்கவே, பாடுபட்டவர் அவர்; மதத்தைக் காட்டிக் எத்தர்கள் ஏமாளிகளைச் சுறண்டிக் கொழுத்திடுவதை எடுத்துக்காட்டிக் கண்டிக்கும்போது, என்ன செய்ய முடியும்? நாத்திகம் பேசுகிறார் என்று கூறினால், மக்கள் நம்பமாட்டார்கள். எனவே, அவரை ஒழித்துக்கட்டினால் மட்டுமே, தங்கள் சுறண்டல் தங்கு தடையின்றி நடைபெறும் என்ற முடிவுக்கு வந்தனர். மூன்று முறை சுட்டு அல்லவா, மதவெறி, தன் உண்மை வடிவத்தைக் காட்டி, அன்புருவான அண்ணலின் உயிர் குடித்தது.

●

தம்பி! இந்தத் திங்கள் அவருக்கு 'ஜெயந்தி' நடத்தினார்கள் காங்கிரஸ் கட்சியினர்—அந்த மேடைகளிலே ரிஷிகேசிலும் அரித்துவாரத்திலும், காளிகட்டத்திலும் காசியிலும் காணப்பட்ட கபடம், கயமைத்தனம், ஆபாசம், அக்ரமம், இவைகளைக் கண்டித்த காந்தியாரைக் காட்டி இருக்கமாட்டார்கள். அந்தக் காந்தியாரைத்தான் கொன்று போட்டாயிற்றே! இப்போது அவர்கள் காட்டும் காந்தியார், இவர்களுக்கு ஓட்டு வாங்கித் தரும் கருவியாக்கப்பட்ட காந்தியார். நான், தம்பி! அந்தக் காங்கிரஸ் நண்பருக்குக் காட்டிய காந்தியார், காசியைக் கண்டு, மனம் குமுறியதையும் கூறுகிறேன், நாட்டினருக்கு எடுத்துக்கூறும், நல்ல தம்பியாயிற்றே, நீ, அதனால்.

●

காசி! கர்மம் யாவும் தீருமாம், அந்தத் திருத்தலம் சென்றால். புனிதக் கங்கை, பாபம் போக்கும்—காசி விசுவநாதரின் தரிசனம், புண்யம் தரும், காசியைத் தரிசித்த பிறகுதான், ஒருவன், பூரண இந்து ஆகிறான் என்பர், வைதிகர்கள்.

அத்தகைய காசிக்குக் காந்தியார், சென்றார்,—பயபக்தியுடன்—தூய உள்ளத்துடன். என்ன கண்டார்? நான் கூறத்தேவையில்லை, அவரே, விளக்கமாக எழுதிவிட்டிருக்கிறார். துவக்கத்திலேயே, தமது துக்கத்தைக் காட்டுகிறார்.

> "நான் சுவாமி தரிசனத்துக்காக, காசி விசுவநாதர் கோயிலுக்குப் போனேன்.
>
> நான் கண்டவை எனக்கு மனவேதனையைத் தந்தன.
>
> நான் அடைந்த ஏமாற்றம், நான் எதிர்பார்த்திருந்ததைவிடப் பன்மடங்கு அதிகமாக இருந்தது."

காந்தியார், ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட இந்து. ஆனால், வேறு பலர், மதப் புரட்டுகளைக் கண்டறிந்த

வர்கள். திருத்தலங்களிலேயே நடைபெறும் அக்ரம ஆபாசங்களை அம்பலப்படுத்தி இருந்தனர். எனவே, காந்தியார் காசி செல்லும்போதே, அவர் ஓரளவு, அக்ரமம் அங்கு இருக்கக்கூடும் என்று எதிர்பார்த்துத்தான் சென்றார்.

ஆனால், அவர் கூறுவதுபோல, அவர் அங்கு கண்டது, எதிர்பார்த்ததைவிடப் பன்மடங்கு அதிகமாக இருந்தது.

மகன், சுயமரியாதை இயக்கம். காசி இராமேஸ்வரம் போவது, காவடி தூக்குவது வீதியில் புரள்வது போன்றவைகள், காட்டுமிராண்டித்தனம் என்று ஊருக்குக் கூறுகிறான். நான் மட்டும், அவன் பேச்சைத் துச்சமென்று கருதலாமா? அதனால்தான், காசி போகிறேன் என்று காமாட்சி சொன்னபோது, ஆசையை அடக்கிக்கொண்டு, போய்வாடி அம்மா! என்று சொல்லி அனுப்பினேன்; அவள் கொடுத்து வைத்தவள், காசி க்ஷேத்திரம் செல்கிறாள், நமக்குத்தான் அந்தப் பாக்யம் இல்லையே, என்று தம்பி! வீட்டிலே பாட்டியோ அத்தையோ, பெரியம்மாவோ பிறரோ, மனச்சங்கடத்தோடு இருப்பார்களானால், அவர்களை ஒருமுறை, காசியைக் காணச்சொல்லு—இங்கு இருந்தபடியே—காந்தியார் கண்ட காசியை—அவர் சுயசரிதையில் சித்தரிக்கப்பட்டுள்ள காசியை.

காந்தியார் அழைக்கிறார், காசியைக்காண!

"குறுகலான, வழுக்கும் ஒரு சந்தின் வழியாகவே கோயிலுக்குப் போகவேண்டியிருந்தது.

அங்கோ அமைதி என்பதே இல்லை.

ஈக்கள் ஏகமாக மொய்த்தன.

கடைக்காரர்களும் யாத்திரிகர்களும் போட்ட சப்தம் சகிக்கமுடியாததாக இருந்தது.

நான் கோயிலுக்குள்ளே போனதும் வாசலில் அழுகி நாற்றமெடுத்த பூக்குவியலே எனக்கு வரவேற்பளித்தது.

உயர்ந்த சலவைக் கற்களாலான தரை. ஆனால் அழகு உணர்ச்சியே இல்லாத ஒரு பக்தர், சலவைக் கற்களை ஆங்காங்கே உடைத்து அவற்றில் ரூபாய் நாணயங்களைப் பதித்துவிட்டார். அந்த ரூபாய்கள் அழுக்குச் சேர்வதற்குச் சிறந்த இடங்கள் ஆகிவிட்டன.

ஞானவாவி (ஞானக்கிணறு) பக்கத்தில் போனேன். அங்கே கடவுளைக் காணலாம் என்று தேடினேன்.

ஆனால் நான் காணவில்லை.

ஆகையால், எனக்கு மனநிலை நன்றாக இல்லை. ஞானவாவியைச் சுற்றிலும்கூட ஆபாசமாகவே இருப்பதைக் கண்டேன். **தட்சணை கொடுக்கவே எனக்கு விருப்பமில்லை. ஆகையால், ஒரு தம்படி கொடுத்தேன்.**

அங்கே இருந்த பண்டாவுக்குக் கோபம் வந்து அந்தத் தம்படியை வீசி எறிந்துவிட்டார்.

இந்த அவமரியாதை உன்னை நேரே நரகத்திற்குத்தான் கொண்டுபோகும் என்று கூறி என்னைச் சபித்தார்."

கவனித்தனையா, தம்பி! நாம் பகுத்தறிவாளர் என்பதனால், பதறிப், பழமையாளர் நம்மீது பாய்கின்றனர், தூற்றுகின்றனர் என்பதைப் பார்க்கும்போது, நம்மிலே, துடிப்புள்ளவர்கள் மெத்தக் கோபப்படுகிறார்களல்லவா!

பிரம்மத் துவேஷி!
வேத நிந்தகன்!
நாஸ்திகன்!
நாக்கு அழுகிவிடும்!
ரௌரவாதி நரகம் போவாய்!
கசடன்!
அசடன்!
அற்பாயுசு!

தம்பி! இவை தமிழகத்திலே, இப்போது, சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுத், துணிவை வரவழைத்துக் கொண்டு, பட்டிதொட்டிகளிலே, குளத்துப் படிக்கட்டுகளிலே, காது கேளாதவன், கண் அவிந்தவன், கதியற்றவன் கிலி கொண்டவன், ஆகியவர்களுக்கு மட்டும் கேட்கும்படி சொல்லப்படும், வார்த்தைகளாகி விட்டன.

உரத்த குரலில், கோபத்துடன், இந்த வார்த்தைகளை, நாடக மேடையில் மட்டுமே, கூறிடக் கேட்கலாம்; நாட்டிலே, இவை இப்போது நடமாடவிடப்படுவதில்லை.

நமது தம்பிகளிலே, பதினைந்து வயதுக்குள் இருப்பவர்களுக்கு இந்த வார்த்தைகள், பொருள் விளங்கா ஓசைகளாகிவிட்டன!

ஆனால், தம்பி! என்போன்றோர் இளைஞர்களாக' பள்ளி மாணவர்களாக இருந்தபோது, இந்தச் 'சாபம்' நித்த நித்தம், நாமெங்கணும்; எவர் செவியிலும் வீழ்ந்துகொண்டிருந்த சங்கீதமாக இருந்தது.

ஐயோ! சாபம் கொடுத்துவிடப்போகிறார்!—என்று பாட்டனார் பதறுவார், பாட்டி, பாதம் வீழ்ந்து வணங்குவாள்—அவ்வளவு பயம் பிய்த்துத் தின்னும்.

கட்டுக்காவலை மதியாமல், குலதர்மத்தைக் கவனிக்காமல், மதத்தை அழித்திடும் போக்கிலே, பேசுவோர், செயலில் ஈடுபடுவோர், ஆகியோருக்கு, பூசுரர், அவர்கள் பூஜை செய்வோராயினும், பூட்ஸ் அணிந்து பரங்கியனுக்குப பணிவிடை செய்வோனாயினும், இடும் சாபம்!

அப்படியா சபித்தனர், என்று, இப்போது தம்பிமார்கள், கேட்டுத் துடிக்கின்றனர்.

அப்போதேகூடச் சிறிது கோபமுள்ளவர்கள், எதிர்த்தனர்—தாக்கினர்—பெரும்பாலும் சொல்லால்.

ஆனால், அப்படிச் 'சாபம்' பெற்றவர்களில், மதத்திலே அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து, இராம நாமத்தைப் பஜித்துக்கொண்டிருந்த, காந்தியாரும் ஒருவர், என்பதை அறியும்போது, வேதனையினூடே சிரிப்பல்லவா வருகிறது.

தட்சணை கொடுத்தார், ஒரு தம்படி!

இது, ஆயிரத்தெட்டு இழிமொழி வீசுவதைக் காட்டிலும், கொடுமையானதாகக், கேவலமானதாகத் தானே தோன்றும்—பண்டாவுக்கு—பூஜாரிக்கு!

இகபரசுகம் இரண்டுக்கும் வழி அருளும் விசுவநாதர் ஆலயம்! காசி க்ஷேத்திரம்! அங்கு, பக்தருக்கும் பரமனுக்கும் இடையிலே, வேதாகமம் தந்த உரிமையின்படி, நிற்கிறார், பண்டா! இந்தப் பொல்லாத காந்தியார், ஒரு தம்படியா, கொடுப்பது தட்சணை!

பவுன் கொடுத்தனர்—வெள்ளி நாணயம் கொடுத்தனர்—பாதம் தொட்டுக் கும்பிட்டுவிட்டு—பக்தர்கள். இவர், ஒரு தம்படி தருகிறார்!

ஆலயத்திலே அமர்ந்துள்ள தேவனிடம், பக்தன் வந்திருக்கிறான்! அவன் பாபம் போக்கு! புண்யம் கிடைத்திடச் செய்!—என்று மன்றாடப் போகிறான் — அதற்கான 'மாதவம்' செய்து பண்டாவானான். அவனுக்கு, ஆலயத்தில், பல பக்தர்கள் முன்னிலையில், காந்தியார், தட்சணை தரப் பணம் இல்லை என்றுகூடச் சொல்லி விட்டிருக்கலாம் — ஒரு தம்படியா, தருவது, தட்சணையாக!

காலமெல்லாம், பண்டாவின் செல்வாக்கைப் பார்த்துப்பார்த்து ஆச்சரியத்தால், அசைவற்று நிற்கும், விசுவநாதர்கூட அல்லவா, ஒரு தம்படி தட்சணை தரப்படுவது கண்டு, விலாநோகச் சிரிப்பார்!

சபித்தார், பண்டா! நேரே நரகம்தான் போவாய் —என்று. என்ன செய்தார், காந்தியார்?

> "இதைக் கேட்டு நான் பரபரப்பு அடைந்துவிடவில்லை. மகராஜ்! என் விதி எப்படியானாலும் சரி, ஆனால், இப்படியெல்லாம் பேசுவது உங்களைப்போன்றதோர் வகுப்பினருக்குத் தகாது. விருப்பமிருந்தால் அந்தத் தம்படியை எடுத்துக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால், அதையும் நீங்கள் இழந்துவிடுவீர்கள், என்றேன்."

எப்படி, காந்தியாருடைய நெஞ்சழுத்தம் என்று கூற அல்ல, இதை எடுத்துக்காட்டுவது, காந்தியாருடைய சொல்லிலே தொக்கி நிற்கும், நகைச்சுவை இருக்கிறதே, அதைக்காட்ட இதைக் கூறினேன்.

தம்பி ! கவனித்தாயா ? கொடுத்தது தம்படி ! பண்டாவுக்கு !! ஆனால், பண்டாவைக் கூப்பிடுவதோ, மகராஜ் !— கவனித்தாயா !

திகைத்துப்போயிருக்கவேண்டும், காசிவாசி.

> "போய்த்தொலை. உன் தம்படி எனக்கு வேண்டாம் என்றார், தொடர்ந்து வசைமாரி பொழிந்தார் !

சரி! பண்டா, வசைமாரி பொழியட்டும் என்று கவலையற்றுக் காந்தியார், தம்வழி நடந்தாரா? அல்லது, நின்று, பண்டாவைப் பார்த்து, அளவுக்குமீறிப் பேசாதே! அவதியைக் கூவி அழைக்காதே! என்று எச்சரித்தாரா? என்ன செய்தார்? அவரே, கூறக்கேள், தம்பி! சுவை காண்பாய்.

> "தரையில்கிடந்த தம்படியை எடுத்துக்கொண்டு நான் நடக்க ஆரம்பித்தேன்.
>
> பிராமணர் ஒரு தம்படியை இழந்தார்.
>
> எனக்கு ஒரு தம்படி மிச்சம் என்று என்னைப் பாராட்டிக்கொண்டேன்.
>
> ஆனால் மகராஜ் அந்தத் தம்படியையும் விட்டுவிடக் கூடியவர் அல்ல.
>
> என்னைத் திரும்பக் கூப்பிட்டார்.

அது சரி, அந்தத் தம்படியை இங்கே கொடுத்துவிட்டுப்போ!

உன் தம்படியை வாங்கிக் கொள்ள நான் மறுத்துவிட்டால், அது உனக்குக் கெடுதல் ஆகிவிடும். என்றார்.

> நான் ஒன்றும் சொல்லாமல், அந்தத் தம்படியை அவரிடம் கொடுத்தேன்.
>
> அப்புறம் ஒரு முறை பெருமூச்சுவிட்டுக்கொண்டு அப்பால் போய்விட்டேன்"

தம்பி! இதைக் கருணாநிதி கதைவடிவாக்கினால், நமது காங்கிரஸ் நண்பர்கள், சீறி விழுவார்கள், கதையாம் கதை! இப்படியா ஒரு சம்பவம் நடக்கும்! அற்பத்தனத்தை அச்சாணியாகவைத்து ஒரு அபத்தக் கதை எழுதிவிடுவதா! இதுதான், தமிழ் வளர்க்கும் வழியா! இதுதான் கலையா! தூ! தூ! சே! சே! என்றெல்லாம் ஏசுவர்.

ஆனால், இது, காந்தியாரின் சுய சரிதையில் இருக்கிறது.

கொடுத்தது தம்படி! கிடைத்தது சாபம்! அந்தத் தம்படியும் இல்லை என்ற நிலை! உடனே, அதையாவது கொடு என்ற பகவதி பிக்ஷாந்தேஹி நிலை!!

ஒவ்வொருமாலையும் காந்தியார் இராமநாமப் பஜனை மட்டும் செய்யாதிருந்திருப்பாரானால், இந்த ஒரு செயலுக்காக மட்டுமே, அவரை, 'ஈரோடு' ஆக்கிவிட்டிருப்பார்கள் வைதிகர்கள்.

ஐந்து கால் பசு, இருப்பதைக் காணீர்! என்று காந்தியாரையே நம்பவைத்த புரட்டர்களுக்கு முதலிடமாகத் திருத்தலங்கள் உள்ளன என்பது, தெரிந்துதான், பகுத்தறிவாளர்கள் அந்த இடங்களுக்குச் சென்று வருவது, நேரக்கேடு, அறிவுக்கேடு என்று கருதுகின்றனர். மெள்ளமெள்ளப் பாமரர்கூடப்புரட்டுகளை வெறுக்கவும், மதத்தைக் காட்டி ஏய்ப்போரின் ஆதிக்கத்தை எதிர்க்கவும் துணிவுபெற்று வருகின்றனர். இந்த நேரத்திலே பாபு இராஜேந்திர பிரசாத் திருத்தல யாத்திரை ஏற்பது பிற்போக்காளர்களுக்கு ஒரு புதிய வாய்ப்பாகிவிடுமே என்பதுதான், நம் போன்றாருக்கு உள்ள கவலை. அதனால்தான் திருத்தலங்களிலே காந்தியார் 'கண்டதைக் குறித்தும், கொள்கை கருத்துப் பற்றியும் எழுதினேன்.

நேருப் பண்டிதர், வேறோர் வகையான திருத்தலம் சென்று வந்திருக்கிறார். அது குறித்துப் பிறகு எழுதுகிறேன்.

அண்ணன்,

அண்ணாதுரை

பிள்ளைப்பாசம்

—ப்டிநி—

அன்பு. த. நாராயணசாமி

“அப்பா, அப்பா எனக்கு ஒரு ‘பொம்மை’ வாங்கி வாப்பா!” என்று எனக்கு ஒரு கட்டளை இட்டாள் என் ஏழாவது மகள் எழிலரசி!

“எனக்குக்கூட ஒரு ‘பொம்மை’ வாங்கிக்கொண்டு வரணும்” என்று தன் ஆள் காட்டி விரலை ஆட்டி அதிகாரம் பண்ணினாள் அம்புலி! ஆமாம், அவளும் என் மகள்தான்—எழிலரசியின் அக்காள்! எழிலரசி எதை வாங்கிக் கொண்டு வரச் சொல்லுகிறாளோ, அதையேதான் அம்புலியும் வாங்கிக்கொண்டு வரச் சொல்லுவாள்! குழந்தைகள் எல்லாம் அப்படித் தானே? அவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றினால்தானே, நமக்கு நிம்மதி? பெரியவன் பெரிய பொருளாகக் கேட்பான், சிறியவன் சிறிய பொருளாகக் கேட்பான்! பிள்ளைகள் என்று பெற்றால், அவர்களுக்கு வேண்டுவனவற்றை நாம் வாங்கிக்கொடுப்பதில்தானே, நமக்கும் இன்பம் இருக்கிறது?

காலையில் எழுந்திருந்து அலுவலகம் செல்லும் வரை ஒருவர் மாறி ஒருவர் தமக்கு வேண்டியவற்றையெல்லாம் ‘பட்டியல்’ தயார் செய்துகொண்டு வந்து என்னிடம் ஒப்பித்துவிடுவர்! அவர்களுக்கு எல்லாவற்றையும் வாங்கித் தரவேண்டும் என்ற வற்றாத வாஞ்சைதான் எனக்கு! ஆனால், அதற்குரிய ‘வளம்’ பெற்றவனாக நானில்லையே! அவர்களுக்கு ஏதேனும் வாங்கி வராமல் போய்விட்டாலோ, அன்றைக்கு அவர்கள் பிடிக்கும் ‘அடம்’ கொஞ்சமா என்ன? அவ்வப்போது, பணம் இல்லாதவனான நான் ஒரு தந்திரம் செய்வதுண்டு! அந்தத் தந்திரத்தை நமது அரசாங்கத்திடமிருந்துதான் கற்றுக்கொண்டேன்! நீங்களும் (பிள்ளைப்பேறு உடையவர்கள் மட்டும்!) கற்றுக் கொள்ள விரும்புகிறீர்களா, அப்படியானால் சொல்லுகிறேன். அது தான் ‘ஐந்தாண்டுத் திட்டத் தந்திரம்’! என்ன புரிகிறதா? ‘இன்று வாங்கி வருகிறேன்’ என்பது இன்றோடு சரி. ‘நாளைக்கு வாங்கி வருகிறேன்’ என்பது ‘நாளை’யாகவே நகரும்! இந்தத் திட்டத்தில் இல்லையேல், அடுத்த திட்டம் என்று நமது அமைச்சர்கள் சொல்லவில்லையா? அதுபோல!

ஆடம்பரச் செலவுகள் செய்யாவிட்டாலும், அவசியமான செலவுகளை மட்டும் தாராளமாகச் செய்து, என் மக்களின் மகிழ்ந்த முகத்தைப் பார்த்தே பரவசப்படுவோம்—நானும், என் இல்லாளும். வாழ்க்கை அமைந்ததே ‘மக்கட் பேறு’ பெற்று மகிழ்வோடு வாழத் தானே?

எத்தகைய இன்பங்கள் கிடைத்திட்டாலும், எத்தகைய நலன்கள் ஏற்பட்டாலும், நமது மழலைச் செல்வங்களைப் பார்த்து நாம் பெறும் இன்பங்களுக்கும், நலன்களுக்கும் ஈடாகுமா, அவைகள்? எத்தனை துன்பங்கள் வந்திட்டாலும், அத்தனையையும் அக்கணமே மறந்திடச் செய்வது, நாம் பெற்ற செல்வங்களின் சிங்காரப் புன்னகை தானே? என்ன, நான் எங்கேயோ உங்கள் கவனத்தை இழுத்துக் கொண்டு வந்துவிட்டேனா? ஆமாம், என் மகளின் விருப்பத்தை ஈடேற்றிவைக்கும்வண்ணம், கடையில் ‘பொம்மை’ ஒன்றை வாங்கிக் கொண்டிருந்தேன். வாங்கிய பொம்மையை இடது கையில் வைத்துக் கொண்டு, வலது கையால் கடைக்காரனுக்குப் பணம் கொடுத்துக் கொண்டேயிருந்தேன்! யாரோ, ‘லபக்’கென்று ‘பொம்மை’யைப் பிடுங்கிக்கொண்டு... ‘ஆ! என் பொண்ணு, கண்ணே, கண்ணே! இத்தனை நாள் எங்கே போயிருந்தே? என் பொண்ணுக்குத்தான் இந்தப் பொம்மை! என் கண்ணுக்குத்தான் இந்தப் பொம்மை...என் கண்ணு கிடைச்சிட்டா...... என் பொண்ணு பொழச்சுட்டா... ஆ... உயிர் வந்திடுச்சி என் பொண்ணுக்கு......’ என்று இன்னும் ஏதேதோ உளறிக்கொண்டிருந்தாள் ஒரு ‘பைத்தியக்காரி!’ நான் அவளை அணுகி என்னவென்று கேட்பது! அதோ, அவள் ஓடியேவிட்டாளே! ‘ஐயோ, பாவம். தன் குழந்தையைப் பறிகொடுத்ததால் ‘பைத்தியக்காரி’ ஆகிவிட்டாள் போலும்! என்று பரிதாபமான அவளை எண்ணிக்கொண்டே கடற்கரை நோக்கிச் சென்றேன்! அமைதியான ஓர் இடத்தில் அமர்ந்தேன்!

‘அவளின் குழந்தை எப்படிச் செத்திருக்கும்?’ என்ற ஆராய்ச்சியில் என் மனம் இறங்கியது! எத்தனையோ வகைகள் என்னுள்ளத்தில் உதித்தன! ஆனால், அவைகளில் எது உண்மையோ? இதை எண்ணிக்கொண்டிருக்கும்போதே, எனக்குப் பின்புறமிருந்து ‘விக்கி, விக்கி’யழும் ஒரு குரல் என்னை நோக்கி வருவதை உணர்ந்து திரும்பிப்பார்த்தேன்! பாவம் குல விளக்கை இழந்தவள்தான், தன் உடல் குன்ற, ‘குலுங்கிக் குலுங்கி’ அழுதுகொண்டே வந்தாள்!

‘பைத்தியம் அழுகிறதே’ என்று அதிசயித்தேன்! பைத்தியங்கள் சில வேளைகளில் தங்களுடைய உண்மையான நினைவுகள் வரும்போது அழுவதுண்டாம்!

அப்படியானால். இவளுக்கு இப்போது உண்மையான நினைவு வந்திருக்குமா? ஏதாவது கேட்டால் நன்றாகப் பேசுவாளா? என்று எண்ணினேன். என் எண்ணத்தை நிறைவேற்றி வைப்பவள்போல் என் அருகே வந்து அமர்ந்தாள்! என்னிடமிருந்த அச்சம் சிறிது குறைந்தது!

'ஏன் அழுகிறாய்?' என்று கேட்டேன்! பதிலில்லை! துக்கம் தொண்டையை அடைக்க அவள் என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள்! அந்தப் பொம்மையை என்னிடம் கொடுக்கக் கை நீட்டினாள்.

'வேண்டாம், நீயே வைச்சுக்கோ. உன் பொண்ணுதான் அது. அதற்கு உயிரு வந்திடுத்து' என்றேன்! பலன்—நான் பைத்தியக்காரன் ஆனேன்!

ஆமாம், 'ஐயோ பைத்தியம் பொம்மையைப்போயி என் பொண்ணுங்கிறியே! என் பொண்ணுதான் செத்துப்புட்டாளே!' என்றபடியே தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, மீண்டும் அந்தப் பொம்மையை என்னிடம் கொடுக்க முனைந்தாள்! நானும் மறுக்காமல் அதை வாங்கி வைத்துக்கொண்டு, 'அப்படியானால், உன் குழந்தை எப்படிச் செத்துப்போச்சு, சொல்லுவியா?' என்றேன்! அவள் விக்கி விக்கித் தன் கொச்சை மொழியில் கூறியதை நான் தொடுத்துத் தருகிறேன். கேளுங்கள்!

அவள் வெளியூர் ஒன்றைச் சேர்ந்தவளாம், அவளும், அவன் கணவனும் பிழைப்புத் தேடிச் சென்னை வந்தனராம்! இங்கே வந்த அவர்கள் கூலி வேலை செய்து பிழைப்பு நடத்தி வந்தனராம்! இல்லற வாழ்க்கையில் ஈடுபட்ட அவர்களுக்கும் இனிதே பிறந்தனவாம். கூலி வேலை செய்தேனும் கிடைத்ததைத் தம் மக்களுக்குக் கொடுத்து மகிழ்வதில் அவ்வளவு இன்பமாம் அவர்களுக்கு! பார்த்தீர்களா, பணம் படைத்தோருக்கும், ஏழ்மையைப் படைத்தோருக்கும் குறையாத ஒரே அளவாகக் கிடைக்கும் ஒரே செல்வம்—ஒரே இன்பம்—அந்த 'மக்கட்பேறு' ஒன்றுதானே? அவர்களுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தனவாம். வறுமையில் வாடிய அவள் கணவனுக்கு என்ன 'எண்ணம்' வந்ததோ, 'கருத்தடையை'ச் செய்துகொள்ளுமாறு தூண்டினானாம்! இவள் மறுத்தாளாம், அவன் மரக்கட்டையால் அடித்தானாம்! கடைசியில், இருவரும் 'கருத்தடை' முறையை அறுவை மூலம் செய்துகொண்டனர்!

கருத்தடை செய்த மறுவாரமே, அவளின் பெரிய மகன் வயது எட்டிருக்கும்—ஒரு விபத்துக்குள்ளாகி இறந்துபட்டானாம்! இந்தச் சமயத்தில், (கதை கேட்டபோது) நான் சிறிது கலங்கினேன்! அந்த மூத்த மகனின் இறப்பே, அவள் கணவனை வைத்தியசாலைக்கு அனுப்பிவிட்டதாம்! பெற்ற மனம் பரிதவித்தது!! பிள்ளைப் பாசம் சும்மா விடுமா? இந்த நிலையில், இரண்டாவது மகனோடும், மூன்றாவது மகளோடும் சேர்ந்து பிச்சையெடுக்க ஆரம்பித்தனராம்! பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்பதுபோல, துன்பச் சூழலில் சிக்கிய மகன்—அம்மை போட்டு அழிந்துபட்டானாம்! ஐயோ, என்னே அவள் செய்த பேறு? பெற்ற மக்களை இழந்தாள், உற்ற கணவனையும் படுக்கையில் இட்டுவிட்டாள்! (ஆனாலும் கணவன் தன் உடல் தேறிச் சிறிது நலத்தோடு இருந்தானாம், சிறிது நாள்! பிறகு!) பச்சைக் குழந்தையோடு நிற்கும் அவளின் இச்சையை யார் தீர்க்க முனைவர்? கூலி வேலை செய்யச் சொல்லலாம் என்றாலோ, குழந்தையை எங்கே விட்டுச் செல்வது? ஆகையால், இருந்த இடத்திலேயே தன் இருக்கையை அமர்த்திக்கொண்டாள். உண்ண உணவில்லை, அதனால் நடக்கச் சக்தியில்லை! எங்கு சென்று ஊதியம் பெறுவாள்? உற்றார் உண்டா, அல்லது பெற்றவர்கள்தான் உள்ளனரா—அவளைக் கவனிக்க? அவர்களையெல்லாம் விட்டுவிட்டுத்தானே நகர் அடைந்தாள்—கவலையால் கட்டுடல் கரைந்தது! ஏக்கத்தால் எழில் நிறைந்த அவ்வுடல் நிலை குலைந்து போயிற்று! நிலை குலைந்த அவ்வுடலிலிருந்துதான் நிலை குலையாமல் வாழ அப்பச்சிளம் பாலகி எங்கே 'பாலை' எதிர்பார்க்க முடியும்? ஆமாம், 'என் கண்ணான பொண்ணும் இறந்துவிட்டாளய்யா' என்று தன் கதையின் முடிவில் உரக்கக் கூவியவள், பலத்த சிரிப்போடு ஓடியே விட்டாள்! அவள் கணவன் என்ன ஆனானோ, அவள் சொல்லவில்லை. ஆனாலும், அவன் உயிரோடு இருப்பான் என்பது மட்டும் நிச்சயம்! அவன் உயிரோடு இருந்தால் மட்டும் என்ன பயன்? அவளுக்கும் 'பைத்தியம்' தெளிந்துதான் என்ன பயன்? இறந்துபட்ட மகப்பேற்றுக்கு ஈடு செய்ய அவளால் இனி முடியுமா?

எத்தனை அறிவுச் செம்மல்களை ஈன்றெடுக்க இருந்ததோ, அந்த வயிறு! 'ம்...ஏழைக்குப்பிறந்துதானா முன்னுக்கு வந்துவிடும்!' என்று முணுமுணுப்போரும் உண்டு! அவர்களுக்குத் தெரியாது, உலகில் உதித்த நல்லவர்கள்-உத்தமர்கள்—அறிஞர்கள்—விஞ்ஞானிகள்—இவர்களில் பெரும் பகுதியினர் ஏழ்மைக் குடியில் பிறந்துதான் ஏற்றதொரு வாழ்வு பெற்றனர் என்பதை! ●

<u>தலைமை நிலைய அறிக்கை (அ) 2/60</u>

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட

அநீதி கண்டன வாரம்

25—9—60 அன்று நடைபெற்ற தி. மு. க. பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கிணங்க 10—10—60 முதல் 16—10—60 வரை நாடெங்குமுள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளும், சார்பு மன்றங்களும், ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் ஆகியவைகளின் மூலம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட அநீதி கண்டன வார நிகழ்ச்சிகளை நிறைவேற்ற கேட்டுக்கொள்கிறோம்.

'அறிவகம்', சென்னை-13
8—10—1960

இரா. நெடுஞ்செழியன்
கொள்கை பரப்புச் (பிரச்சாரம்) செயலாளர்

ஒரு வாய் கஞ்சி

கனகு

ஒன்றுமில்லாத பரபரப்போடு வேலையில் ஈடுபட்டிருந்தான் தில்லைவனம். அடிக்கொரு முறை உள்ளறையை எட்டிப் பார்த்துக்கொண்டான். அங்கே, நோய் வாய்ப்பட்டுக் கிடக்கின்றாளே, அவளுக்காகத்தான் இத்தனை பரபரப்பும். அவள், அவன் மனைவி. கடந்த இரண்டு வாரங்களாக அவள் படுக்கையிற் கிடக்கின்றாள் — காய்ச்சல்—வெறும் காய்ச்சல்—என்று தொடங்கிய அந்த நோய் இரண்டொரு நாளில் சரியாய்ப் போய்விடும் என்றுதான் அவன் நினைத்தான். அவளும் நினைத்தாள். அது இவ்வளவு தூரம் கடுமையடைந்துவிடும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. வீட்டில் மனையாள் நோய்வாய்ப்பட்டுத் தவித்துக்கொண்டிருக்கும்போது, அவனுக்கு வேலையிற் கருத்துச் செல்லுமா?

அடுத்தடுத்து நாலு நாட்கள் அரசினர் மருத்துவமனைக்குப் போய் அலைந்து பார்த்துவிட்டார்கள் அவர்கள். அங்கே கால் கடுக்க நின்றதுதான் இலாபம். அவள் உற்ற அந்த நோயினைத் தீர்க்க வேண்டிய மருந்து அந்த மருத்துவமனையில் இல்லையாம். மருத்துவர் சீட்டு எழுதிக் கொடுத்துவிட்டார், 'கடையிலே விலைகொடுத்து மருந்து வாங்கிக்கொள்ளுங்கள்' என்று. கடையில் மருந்து வாங்கும் நிலையிலா அவர்கள் இருக்கிறார்கள்?— அதுவும் அந்த மருந்தின விலை என்ன தெரியுமா? ஒரு வேளை மருந்துக்கு மட்டும் ஐந்து ரூபாய் கொடுக்க வேண்டுமாம். அப்படி மூன்று வேளை வாங்கி உட்கொண்டால்தான், நோய் ஓரளவு நீங்குமாம். பதினைந்து ரூபாய்' அட அப்பா! அந்தப் பதினைந்து ரூபாயை மொத்தமாக அவர்கள் பார்த்தே ஆண்டுக் கணக்காகின்றதே!

“மருந்தும் வேண்டாம், ஒரு கண்றாவியும் வேண்டாம்! பேசாமல் என்னை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போய்விடுங்கள்” என்று கணவனின் அவல நிலையைப் பார்த்த மனையாளே சொல்லிவிட்டாள். அவனும் செய்வதொன்றும் தோன்றாமல், வீட்டுக்கும் மருத்துவமனைக்கும் வறிதே நடந்தது, திரிந்தது, அலைந்தது போதும் என்று வீட்டுக்குத் திருப்பிவிட்டான்.

அதோ, இப்போது அவளுக்கு வேண்டியது மருந்து அல்ல. ஒரு வாய் கஞ்சி. அந்தக் கஞ்சிக்கு அங்கே வழியில்லை, எப்படி வழி இருக்கும்? மனையாள் உடல்நலத்தோடிருக்கும்போது, அவளோடு சேர்ந்து பகல் முழுதும் உழைத்தால்தான் இரண்டு பாய்கள் பின்னுவார்கள் அவர்கள். அந்த இரண்டு பாய்களையும் கணவன் கொண்டுபோய் விற்கவேண்டும். தெருத் தெருவாக அலைந்து விற்க வேண்டும். இரண்டுக்குமாகச் சேர்த்துச், செலவெல்லாம் போக ஒன்றரை ரூபாய் கிடைக்கும். அந்த ரூபாயை வைத்துக்கொண்டுதான் அவர்கள் நாளும், நாளும் எப்படியோ காலத்தை ஓட்டிக்கொண்டு வந்தார்கள்.

கடந்த பதினைந்து நாட்களாகத்தான் மனையாள் வேலை செய்யவில்லையே! தில்லைவனம்தான் உழைத்தாக வேண்டும். அதிலும் மருத்துவமனைக்கும், அங்கும் இங்குமாக அலைந்ததால், நாலைந்து நாட்கள் வேறு வீணாகிவிட்டன. கையில் தம்பிடி இல்லை. வீட்டில் மணியரிசி கிடையாது. மனையாள் 'கஞ்சி, கஞ்சி' என்று துடிக்கின்றாள். அவளின் குரல்கூட ஓய்ந்து போய்விட்டது. மயக்க நிலையில் உறங்கிக் கொண்டிருப்பவள்போல், அதோ பாயில் கிடக்கின்றாள் அவள்.

தில்லைவனம் பரக்கப் பரக்கச் செயல் புரிகிறான். அந்தப் பாயைப் பின்னி எடுத்துக்கொண்டுபோய் விற்றால்தான் கஞ்சிக்கு வழி ஏற்படும். அதோ அடிக்கொரு முறை, உள்ளறையில் சோர்ந்துபோய்க் கிடக்கும் மனையாளை எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டு தன் வேலையில் தீவிரமாக முனைந்திருக்கிறான். அவன் சிந்தை அவனிடம் இல்லை. அது வேலையில் ஒட்டிக்கொண்டு கிடக்கின்றது. அவன் உயிர் அவனிடம் இல்லை. அது ஊசலாடிக்கொண்டு கிடக்கும் அவன் இல்லக்கிழத்தியின் உயிரோடு ஒன்றிக்கொண்டு கிடக்கின்றது. அவன் உழைக்கின்றான்.

வேலை ஒருவாறு முடிந்துவிட்டது. தயாராகிவிட்டது பாய். அவன் இப்போதுதான் நிமிர்ந்து பார்க்கிறான். 'மணி என்ன?' வெளியில் வந்து நிழலைப் பார்க்கிறான். அடே, அப்பா! நிழல் எவ்வளவு தூரம் சரிந்துகொண்டு போய்விட்டது! மணி நாலுக்கு மேல் இருக்கும் போலிருக்கிறதே!

பின்னிய பாயைத் திண்ணைமீது வைத்துவிட்டு, அவன் உள்ளே வருகிறான் — மனையாளைப் பார்ப்பதற்கு. அவள் அசைவு இல்லாமல் கிடக்கின்றாள். இலேசாக மூச்சு வாங்கிக்கொண்டிருக்கிறது. உடல் கொதிக்கின்றது. அவன் நெற்றியில் கைவைக்கிறான். அவள் கண்களைத் திறந்து பார்க்க முயல்கிறாள். அவை அவளை மீறியபடி செருகிக்கொண்டு, செருகிக்கொண்டு போகின்றன. மிகவும் பிரயாசைப்பட்டுத் திறந்துகொள்கிறாள் கண்களை. அவளால் பேச முடியவில்லை. தாகமாக இருக்கின்றதென்று கையால் சாடை காட்டுகின்றாள். அவன் பக்கத்திலிருக்கும் வெந்நீரை எடுத்து அவள் வாயருகிற்கொண்டு செல்கிறான். அந்த வெந்நீர் காலையில் சூடேற்றியது. இப்போது சில்லிட்டிருந்தது. இருந்தாலும் பரவாயில்லை. அந்த வேளையில் அவள் கேட்டதும் முடை இல்லாமல் அந்த ஆறிய வெந்நீரையாவது கொடுக்க முடிந்ததே! அவள் ஒரு மிடறு குடிக்கின்றாள். அது புரை மேறுகிறது. மேலே குடிக்க முடியவில்லை. 'இந்த வேளையில் சிறிதளவு கஞ்சி இருந்து, இப்படி ஒரு மிடறு குடிக்கக் கொடுத்தால்...' என்று அவன் தனக்குள் எண்ணிக் கொள்கிறான்.

சட்டென்று அவன் திரும்புகிறான். 'பாயைக் கொண்டுபோய் எங்காவது, போட்டுவிட்டு அரிசி வாங்கிக்கொண்டு ஒரு நொடியில் திரும்பவேண்டும்' என்று அவன் தனக்குள் சொல்லிக்கொள்கிறான். போகிற போக்கில் மறுபடியும் திரும்பி மனையாளைப் பார்க்கிறான். அவள் கையசைக்கிறாள். ஏன்?

அவனை நெருங்கிப்போய் நிற்கிறான் அவன். "ஏன்? அழைத்தது ஏன்?" என்று கவலையுடன் வினவுகின்றான்.

அவள் தன் பலத்தை எல்லாம் கூட்டிப் பேசுகின்றாள். அந்தப் பேச்சொலி மென்காற்றின் ஒலி அளவு எழுந்து அவன் காதுகளில் மோதுகின்றது.

"இன்று எங்குமே போகாதீர்கள்! இங்கேயே இருங்கள்!" என்கிறாள் அவள்.

"உனக்குக் கஞ்சி வேண்டாம்? விரைந்துபோய், பாயை விற்றுவிட்டு அரிசி வாங்கிக்கொண்டு வருகிறேன், அரிசி."

அவள் பதிலுக்காக அவன் காத்திருக்கவில்லை. விருவிரு என்று, பாயைக் கையில் எடுத்துக் கொண்டு நடந்தான்.

"பாய் வேணுமா பாய்! அம்மா பாய்! ஐயா பாய்! பாய் வேணுமா பாய்!" போகின்ற போக்கில் கூவிக் கொண்டே போகிறான்.

அதோ முச்சந்தி. அங்கே நிற்கிறான், அவன் பாயும் கையுமாக.

"பாய் வேணுமா பாய்!"

வாய் ஒலிக்கின்றது. கண்கள் சுற்றுமுற்றும் பரபரப்போடு பார்க்கின்றன.

வருவோர் போவோர் எல்லாம் அவனையும், அந்தப் பாயையும் ஏற இறங்கப் பார்த்துவிட்டுச் செல்கின்றார்கள். ஒருவரும் விலை கேட்கவில்லை. நெடுநேரம் நிற்கிறான அவன். கால்கள் கடுக்கின்றன. அதை அவன் பொருட்படுத்தவில்லை. "பாய் வேணுமா பாய்!" குரல் கம்மிவிட்டது. உரத்துக் கூவத் தெம்பு இல்லை. அவனும் நீருணவுகூட அருந்தவில்லையே காலையிலிருந்து.

பொழுது கரகரவென்று இறங்கி விட்டது. இருள் கவிந்துகொண்டது. விளக்கேற்றி விட்டார்கள் தெருவெங்கும். அந்த விளக்கொளி கூட அவன் உள்ளத்தில் இருளைத்தான் பாய்ச்சுகின்றது. அவனுக்கு ஆத்திரம், ஆத்திரமாக வருகின்றது. யார்மீது காட்டுவான் ஆத்திரத்தை? திரும்பவும் அவன் கூவுகிறான்: "பாய் வேணுமா, பாய்! ஐயா பாய்!" அந்த ஒலி ஓங்கி எழவில்லை. அது அவன் தனக்குத் தானே தணிந்த குரலில் பேசிக் கொள்வதுபோல் ஒலிக்கின்றது.

கடைசியாக அங்கே ஒரு கிராக்கி வருகிறது.

"என்னப்பா விலை பாய்?"

"அடக்க விலையே இரண்டு ரூபாய்ங்க. நீங்க ஒண்ணேமுக்கால் ரூபா கொடுங்க" — 'மகராசன், நீ நல்லா இருக்கவேண்டும். இவ்வளவு நேரத்துக்குப் பிறகு நீயாவது வந்தாயே, இதை வாங்குவதற்கு!' என்று அவன் அந்தக் கிராக்கியை மனத்துக்குள் வாழ்த்துகிறான்.

"ஒண்ணேகால் ரூபாய்க்கு கொடுக்கின்றாயா?"

அந்தக் கிராக்கி பேசுகின்றது. அவன் திகைக்கின்றான். 'அடபாவி, உனக்குக் கண் இல்லையா! இந்தப் பாயை ஒண்ணேகால் ரூபாய்க்குக் கேட்கின்றாயே!' என்று அவன் பேசவில்லை. உள்ளம் குமுறியது.

"என்ன சொல்றே? — ஒண்ணேகால்; தர்றியா?"

கிராக்கி அதே விலையைக் கேட்டபடி நடந்துகாட்டிற்று. அவன் திகைத்து நின்றான்.

அடுத்தடுத்து மேலும் இருவர் வந்தனர். பாயை விலைகேட்டனர். கேட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அவர்கள் பாய் வாங்க வரவில்லை, சும்மா விலை கேட்க வந்தவர்கள்,

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. கடைத்தெருவின் சந்தடி ஒடுங்கிக் கொண்டு வந்தது. தில்லைவனம் தவித்தான்; துடித்தான். என்ன செய்வான் பாவம்! பாய் இன்னும் விற்பனையாகவில்லையே!

அவன் நின்றுகொண்டிருந்த அந்த முச்சந்திக்கு அருகில் ஒரு பூக்கடை. அந்தப் பூக்கடைக்காரன் கடையை எடுத்து வைத்துக்கொண்டிருந்தான். அவன் திடீரென்று, எதையோ நினைத்துக் கொண்டவன்போல் தில்லைவனத்தைக் குரல் எழுப்பி அழைத்தான்.

"அவன் ஏன் அழைக்கிறான்? ஒரு வேளை..."

அவன் அருகிற் சென்றான் தில்லைவனம்.

"எனக்கு ஒரு பாய் வேண்டும். ஒன்று போட்டுக்கொண்டு வந்து தருகின்றாயா?"

"அட, இவ்வளவுநேரமும் இங்குதானே நின்றுகொண்டிருந்தேன். அப்போதே கேட்டிருக்கக் கூடாது?"

"நான் நாளைக்குத்தானேவேண்டுமென்கிறேன். நல்லதாகப் போட்டுக் கொண்டுவா!"

"ஏன், இதுகூட நல்லதுதான். இரட்டைக் கோரை. கெட்டிப் பின்னல். இதை வாங்கிக்கொள்ளேன்!"

"இது பெரிதாக இருக்கின்றதே! —எனக்கு வேண்டியது ஓராள் பாய்தான் — இங்கே கடையில் போடுவதற்கு."

"இல்லை. இதையே எடுத்துக் கொள்." தில்லைவனம் பரபரப்போடு பேசினான். விரைவில் அதை விற்றுவிட்டுப், பணத்தை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு ஓடவேண்டும் என்ற அவசரம் அவனுக்கு.

பூக்கடைக்காரன் அந்தப் பாயை வாங்கி மேலும் கீழும் நோக்கமிட்டான். "சரி, இது என்ன விலை?"

"அதிகம் வேண்டாம். ஒண்ணே முக்கால் ரூபாய் கொடுத்துவிடு."

"ஒண்ணே முக்கால் ரூபாயா? இல்லை ஒண்ணரை வாங்கிக் கொள்"

பூக்கடைக்காரன் பாயைக் கடைக்குள் போட்டான்.

தில்லைவனம் நின்றான்.

பூக்கடைக்காரன் தன் அலுவலில் முனைந்தான்.

"அண்ணே!"

"என்ன?" — பூக்கடைக்காரன் நிமிர்ந்து நோக்கினான்.

"பணம்..."

"என்ன, பணமா?—அதற்குள் மறந்துவிட்டாயா நீ? முன்னே எனக்கு நீ இரண்டு ரூபாய் தர வேண்டுமல்லவா? அதில் கழித்துக் கொள் இதை. பாக்கி போக, அரை ரூபாய் எப்போதாவது கொண்டுவந்து கொடு"

தில்லைவனம் திகைக்கவில்லை. அவன் நினைவு இழந்துவிட்டான். அப்படியே தரையில் சாய்ந்துவிட்டான்.

திரும்பவும் தில்லைவனம் கண் திறந்து பார்த்தபோது, அவன் திண்ணையில் கிடந்தான். உள்ளறையில் 'மினுக் மினுக்' என்று விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அக்கம் பக்கத்துப் பெண்கள் இருவர் அங்கே நின்றார்கள்.

ஆமாம், அவனுடைய இல்லக்கிழத்தி அங்கே பிணமாகக் கிடந்தாள்.

★

"எல்லோரும் சமமென்பது....!"

"இந்தியாவிலுள்ள எல்லா மக்களும் ஒன்றே—அவர்கள் பண்பாடு, கலாச்சாரம் எல்லாம் ஒன்றே. அவர்களிடையே பேதம் கற்பிப்பது பேதைமை" என்று நாள்தோறும், பேசுகிற இடம், பாராளுமன்றமானாலும், "பரத நாட்டிய" மேடையாக இருந்தாலும், அமைச்சர்கள் முதல், அவசரக் காங்கிரஸ்காரர் வரை எல்லோரும் பேசி வருகிறார்கள். ஆனால் அதே சமயத்தில், இந்தியா ஒன்றல்ல, கலாச்சாரம் ஒன்றல்ல, பண்பாடு ஒன்றல்ல, என்பதை எடுத்துக்காட்டும் வகையில் மட்டுமல்ல, ஒரே கலாச்சாரம், ஒரே பண்பாடுள்ள மக்களிடையே கூடப் பேதா பேதங்கள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன என்பதற்கு, அன்றாடம் நிகழ்ச்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வெளியூர் 19—9—60 திங்கட்கிழமை, "மெயில்" ஆங்கிலத் தினசரி ஏட்டில் ஒரு நிகழ்ச்சி குறித்து விரிவான செய்தி ஒன்று வந்துள்ளது. அதைப் படிக்கும் போது,சிரிப்பும்,"இன்னமும் இந்த நாடு இப்படிப்பட்ட நிலைமையிலே தானே உள்ளது" என்ற எண்ணமும் ஏற்படும். செய்தி இதுதான். மதுரைக்கு அருகேயுள்ள அழகர் மலையில், அம்மலையின் மேலிருந்த ஒரு பழைய மண்டபத்தைப் புதுப்பித்து, அதைச் சுப்பிரமணியர் ஆலயமாக மாற்றியிருக்கிறார்கள் சைவர்கள். அவ்வழகர் மலையின் அடிவாரத்தில், கள்ளழகர் கோயில் ஒன்றுள்ளது. அது வைணவ மதத்தினர் கொண்டாடும் தலமாகும். அவ்வைணவர்கள், "அழகர்மலை மேலுள்ள, தற்போது புதுப்பிக்கப்பட்டுள்ள கோயில், கள்ளழகர் கோயிலுக்கு, அதாவது வைணவர்களுக்குச் சொந்தமானது; அதில் சுப்பிரமணியருக்கு ஆலயம் அமைத்தது, பெரிய குற்றம், அடாது, தகாது, இதை வைணவர்களாகிய நாங்கள் ஒப்பமாட்டோம் என்றும்; அம்மலையுச்சியிலுள்ள சுனையின் நீரைத் தினமும் கொண்டுவந்து கள்ளழகருக்கு "அபிஷேகம்" செய்வது வழக்கமாயுள்ளது, ஆண்டுக்கொரு முறை கள்ளழகர் அம்மண்டபத்தில் தங்குவதும் வழக்கம் என்றும்; காட்டிலாகா ஆதாரப்படியும் அது வைணவர்களுக்குத்தான் சொந்தமென்றும், கள்ளழகர் கோயில் நிர்வாக அதிகாரியும்,

தி. வீ. பாலு

டிரஸ்டியும், அச் சதிச் செயலுக்கு உடந்தையாக இருந்து சுப்பிரமணியர் கோயில் அமைக்க இடங் கொடுத்து, வைணவரின் சொத்துக்குப் பாதுகாப்பளிக்கத் தவறி விட்டார்கள் என்றும்; எனவே, அம்மண்டபத்தில் எழுப்பியுள்ள கோயிலுக்கு "கும்பாபிஷேகம்" நடைபெறுவதைத் தடை செய்ய வேண்டுமென்றும்; அம்மண்டபம் (கோயில்) தமக்கே சேரவேண்டுமென்றும் வைணவ அன்பர்கள் வழக்குத் தொடுத்துள்ளனர்.

இம்மலைக்கு, "பழமுதிர் சோலை" என்று ஒரு பெயரும் உண்டென்றும், முருகப் பெருமானுடைய ஆறு படை வீடுகளில் இதுவும் ஒன்று என்றும், அம்மண்டபத்திற்கருகே, முருகனின் வேல் ஒன்று கண்டெடுக்கப்பட்டதாயும், அடிவாரத்திலுள்ள கள்ளழகர் கோயிலில்கூட, விநாயகர் கோயில் உள்ளதாயும்; அதில் வைணவர் உள்பட அனைவருக்கும், விபூதி வழங்கப்பட்டு வருவதாயும், எனவே, அழகர்மலை உச்சியில் தற்போது புதுப்பிக்கப்பட்டிருக்கும் சுப்பிரமணியர் கோயில், சைவர்களுக்குத்தான் சொந்தமென்றும்; மேலும் ஏற்கெனவே "கும்பாபிஷேகம்" நடந்துவிட்டது என்றும்; இனிக் "கும்பாபிஷேகம்" நடத்த அவசியமில்லையென்றும்; எனவே, அவ்வாலயம், சைவர்களுக்குத்தான் சேரவேண்டுமென்றும் சைவ மெய்யன்பர்கள் எதிர் வழக்காடுகிறார்கள். வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

"அரியும், அரனும் ஒன்றே" என்று அனுதினமும், பஜனை செய்துவருவோர் இதைக் கவனிக்கவேண்டும். ஒரே குன்றில், உச்சியில் ஒரு மதம், அடிவாரத்தில் வேறு ஒரு மதம்! இவ்விரண்டு "மதம்பிடித்தவர்களும்", ஒருவோரோடொருவர் சண்டையிட்டுக்கொள்கின்றனர். மோதல்—உரிமைப் பிரச்சினை. அதுவரை தாங்களே அனுபவித்துவந்த வருமானம், பிரிந்து மலையேறிச் சென்றுவிடுமே என்ற வயிற்றெரிச்சலில் சுப்பிரமணியர் ஆலயமே கூடாது என்கிற அளவுக்குச் சுயநலம் தலைவிரித்தாடுகிறது. மால் மருகன் ஆலயம் வேண்டுமா, திருமால் திருக்கோயில் வேண்டுமா என்பதல்ல நமக்குள்ள பிரச்சினை. நம்மைப் பொறுத்தவரை, புதிதாகச்சுப்பிரமணியர்கோயில்எழுப்பியதைவிட,"முருகன்மருத்துவ நிலையம்" என ஒன்று ஏற்படுத்தி

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... } அலுவலகம் 15
இல்லம் ...118

யிருந்தார்களானால் மனதார வரவேற்றிருப்போம்! நாம் கூறுவது இதுதான். பகவான் சந்நிதானத்தில், பக்தர்களின் "பராம்பர்யம்" இந்த இலட்சணத்தில் பல்லிளித்து நிற்கிறதே என்கிறோம். "மலை உச்சி எங்களுக்குத்தான் சொந்தமென்று" சிவநேசச் செல்வர்களும் "இல்லையில்லை, எங்களுக்குத்தான் சொந்த"மென்று அரிதாசர்களும் சிண்டுபிடிச் சண்டையிலே ஈடுபட்டு, ஆண்டவனின் திருவருள் கிடைக்க, ஆலய வாயிலில் தொழுது நிற்கவேண்டியவர்கள், வழக்கு மன்ற வாயிலில் நிற்கிறார்கள் பக்தகோடிகள்! "முருகா, திருமால் மருகா" என்று நெஞ்சு நெக்குருகப் பாடுகிறார்கள்; ஆனால், மருகருக்குக் கோயில் கட்டியது தவறு என்று, தன் சீடர்கள்கூற, மாமன் திருமாலும், அதைத் தடுத்துக்கூறி "அவன் என் மருகன் தானே, நீவிர் ஏன் தடைசெய்கிறீர்" என்று கேட்டிடக் காணோம்! "எல்லாம்ஒன்றே" எனவாய் ஓயாது ஏகபாரத பஜனை பாடுகிறார்களே! ஒரே நாடுகூட அல்ல, ஒரே மாவட்டம்கூட அல்ல, ஒரே ஊர்கூட அல்ல, ஒரே குன்றின் உச்சியில் ஒரு மதம், அடிவாரத்தில் இன்னொரு மதம்! இருவேறு கருத்துக்கள்! எல்லாவற்றையும் உள்ளடக்கியதுதான் "இந்து மதம்" என்றால், அம்மதத்தைச் சார்ந்த வைணவமும், சைவமும் விரோதம் பாராட்டி, உரிமைப் பிரச்சினை எழுப்பி வழக்காடும் நிலைக்குப் போவானேன்! ஆண்டவனில் என்ன பேதம் இருக்கிறது? இந்த நிகழ்ச்சிக்கு என்ன சமாதானம் கூறமுடியும்? இவ்வளவு பேதங்களை, வேற்றுமைகளை வைத்துக்கொண்டு எல்லோரும் ஒன்றே என்றால், யார் ஒப்புக் கொள்வார்கள்? ஒரே இடத்தில் வசிக்கும் மக்களிடையே — ஆண்டவன் விவகாரத்திலேயே ஒற்றுமை இல்லையே! சிறிதுகூட ஒட்டும், உறவும் இல்லாத வெவ்வேறு இன மக்கள் எவ்வாறு ஒன்றுவர்? எவ்வாறு ஒற்றுமையுடன் வாழமுடியும்? ஒரே மொழி பேசுவோர், ஒரே இனத்தைச் சார்ந்தோர், மதகாரியத்தில் மதம் பிடித்தலைகிறார்களே, வெவ்வேறு மொழி, வெவ்வேறு உடை, வெவ்வேறு பண்பாடுள்ள வேறுவேறு இனத்தார் எவ்வாறு கூடி வாழ இயலும்?

"மன்னும் இமயமலை எங்கள் மலையே" என்று அன்றே பாரதியார் பாடியிருக்கிறாரென்றும், இதை உணராது விந்தியத்திற்கப்பாலேயே எல்லையைக் குறுக்கிப் பிரிவினைபபேதம் பேசுகிறார்களே என்றும், பாரதியார், தபால் வில்லை வெளியீட்டு விழாவில், முழங்கினார்களே, இதோ ஒரே குன்றில், உச்சியில் ஒரு கோட்பாடும், அடிவாரத்தில் இன்னொரு கோட்பாடும் உள்ளதே! "மன்னும் இமயமலை எங்கள் மலையே" என்று பாரதியார் பாடியது கேட்டாவது, "இன்றும் அழகர்மலை எங்கள் மலையே" என்று, சைவரும், வைணவரும் ஒன்றாகக் குரலெழுப்பக் காணோமே! "எனக்குத்தான் சொந்தம், உனக்கில்லை அதில் பந்தம்" என்று பதிகம் பாடிக்கொண்டல்லவா, வழக்குமன்றப் படிகளை எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் பக்தசிரோமணிகள்!

இத்திங்கள், பாரதியாரின் உருவமைந்த அஞ்சற் தலைகள் வெளியிட்டுப் பாரதியார் விழாக் கொண்டாடினர். அந்தப் பாரதியார், "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, நம்மில், ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு" என்றும், "எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு" என்றும் பாடியுள்ளார். ஆண்டவன் கைங்கர்யத்திலேயே ஒற்றுமையில்லையே! எல்லோரும் சமமென்பது உறுதியாச்சா? எங்கே உறுதியாச்சு? பாரதியார் பாடல்கள், மலிவுப் பதிப்பிலா? இங்கே இருக்கிற இத்தகைய பேதங்களை ஒழித்துக் கட்டவே, நமக்கு ஆண்டுகள் பலவாகுமே, இந்தியா ஒன்று என்று ஏற்றுக் கொண்டால், அங்கே சூழ்ந்து நிலவிவரும், பலதரப்பட்ட பேதங்களை, உயர்வு தாழ்வுகளை எப்படி, எப்போது, ஒழித்திட இயலும்! இதுதான் நம் கேள்வி! "எல்லோரும் சமமென்பது உறுதி"யாக வேண்டுமென்றால், "திராவிடம்" அமைத்தாக வேண்டும்! அங்கேதான் நாம் ஒற்றுமையை, எல்லோரும் சமம் என்பதை உறுதிப்படுத்த முடியுமே தவிர, எந்த விதத்திலும் நம்மோடு சம்மந்தப்படாத, முற்றிலும் வேறுபட்ட இனத்தாரோடு வாழும் வரையில், அந்த உறுதி நிலைநாட்டப்பட முடியாது. இதுபோன்ற "அழகர் மலைக் கள்ளர்"களின் "அரி-ஹர சம்வாதங்கள்" நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கும்!

★

'ஏழுமலையான் கோபம்'

திருப்பதி வெங்கடேசப் பெருமாளுக்கு மைசூர் இராஜ்யத்தில் இலட்சக் கணக்கான பக்தர்கள் உள்ளனராம். ஆனால், அவருடைய கோபத்திற்கு பக்தர்கள் உள்ளாகியிருக்கிறார்களாம். சர்வ சக்தி வாய்ந்த ஏழுமலையானின் கோபம் காரணமாகவே மைசூர் இராஜ்யத்தின் கால்வாசிப் பிரதேசத்தில் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாம்.

அதற்குப் பரிகாரம் தேடும் வகையில், "மைசூர் இராஜ்ய மந்திரிகள் தங்களுடைய ஒரு மாதச் சம்பளத்தை ஏழுமலையானுக்குக் காணிக்கை செலுத்தவேண்டும்; தவிர, மெம்பர்களும் ஆலய நிதிக்குப் பணம் கொடுத்துதவுவதாக வாக்குறுதி அளிக்கவேண்டும். அப்போதுதான் நீங்கள் ஏழுமலையானின் கோபத்திலிருந்து விடுபடுவீர்கள்" என்று மைசூர் மேல்சபை உறுப்பினர் ஒருவர், பஞ்ச நிலைமையைப் பற்றிச் சபையில் விவாதித்துக் கொண்டிருக்கையில், மேற்கண்டவாறு கூறினாராம். என்னே அவர் கூற்று.

காஞ்சீபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.